பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 15 வெள்ளிக்கிழமை 01.09.2023 கதிர் 294

### தொல்லியல் திணைக்களத்தால்

# நீதிமன்றக் கட்டளையை மீறியே குருந்தூர்மலையில் கட்டுமானம்

### முல்லைத்தீவு நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு



(ந.லோகதயாளன்.)

நீதிமன்றம் வழுங்கிய கட்டளையைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர்நாயகத்திற்கு இருந்தும் குருந்தூர் மலை தொடர்பில் நீதிமன்றால் வழுங்கப்பட்ட கட்டளைகளை தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சரிவரப் பின்பற்றாது உதாசீனம் செய்திருக்கிறார் என்று முல்லைத்தீவு நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது. ☞2

## இது ரகசியம் அல்ல!

தேர்தல்நெருங்கநெருங்ககட்சிகளுக்குள் குத்துவெட்டுக்களும் தொடங்கிவிட்டன. இன்றைக்கு சிறி லங்கா சுதந்திரக் கட்சிக்குள் நடக்கும் குத்துவெட்டுப் பற்றிய தகவல்களைத்தான் உங்களுடன் பகிர்ந்துககொள்ளப் போகின்றேன்.

இலங்கையின் இரண்டாவது பெரிய கட்சி சுதந்திரக் கட்சி. ஆனால், கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத்தைத் தவிர வேறு எங்கும் அந்தக் கட்சி தனித்துப் போட்டியிடவில்லை. சுதந்திரக்கட்சியிலிருந்து பிரிந்த பொது ஜன பெரமுன (மொட்டுக் கட்சி) சார்பில் - அதாவது ராஜபக்சக்களின் கட்சி சார்பிலேயே - சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பொதுத் தேர்தலில் போட்டியிட்டனர்.

கட்சியின் இந்த பெரும் வீழ்ச்சி, கட்சியை மைத்திரிபால சிறீசேன கைப்பற்றியதில் இருந்துதொடங்கியது. 2015இல்மகிந்தவுக்கு எதிராகஐக்கியதேசியக்கட்சியின்ஆதரவுடன் ஜனாதிபதியாகக் களமிறங்கி வெற்றியும் பெற்றார் மைத்திரிபால சிறிசேன. அப்போது கட்சிமகிந்தராஜபக்சவின்கைகளில் ☞2

## எசல பெரஹெரா நிறைவடைந்தது

தேசத்தின்வண்ணமயமாககலைநிகழ்வாக கருதப்படும் கண்டி தலதா மாளிகையின் வருடாந்த எசல பெரஹெரா பண்டைய முறைமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் சிறப்பாக நிறைவு செய்யப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணம் தியவடன நிலமே பிரதீப் நிலங்க தேல அவர்களினால் நேற்றுகண்டிஜனாதிபதிமாளிகையில்ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

ஊர்வலமாககண்டிஜனாதிபதிமாளிகைக்கு வருகைத்தந்ததலாதாமாளிகையின் தியவடன நிலமே பிரதீப் நிலங்க தேல உட்பட ☞2

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை திருத்துவதற்கு அமைச்சரவை முடிவு

தற்போது வரைவாக்கம் செய்யப்பட்டுள்ள சட்ட மூலத்திற்கு அறிமுகப் படுத்தப்பட்டுள்ள திருத்தங்களை உள்வாங்கி பயங்கரவாதஎதிர்ப்புச்சட்டமூலத்தை மீண்டும் தயாரிப்பதற்காக சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனைக்குஅமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை நீக்கி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அறிமுகப் படுத்துவதற்காக சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்ட மூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்காக 2023 மார்ச் 27 இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள குறித்த சட்டமூலத்தில் குறிப்பிடப் பட்டுள்ள ஒரு சில பிரிவுகள் தொடர்பாக ஆர்வம் காட்டுகின்ற பல தரப்பினர்களால் முன்வைக்கப்பட்டுள்ள ☞2

## இராஜதந்திர எல்லைகளை மீறுகிறார் அமெரிக்க தூதுவர்

### தேசிய அமைப்புக்கள் குற்றச்சட்டு

இலங்கைக்கான அமெரிக்கதூதுவர் ஜூலிசுங் வியன்னாஉடன்படிக்கையின் இராஜதந்திர எல்லைகளை மீறியுள்ளதாக குற்றஞ்சாட்டி தேசிய அமைப்புகளின் கூட்டமைப்பினர் அயலுறவுத்துறை அமைச்சிடம் கடிதமொன்றைகையளித்தார்.

66 அமைப்புகளின் பிரதிநிதிகள் கையெழுத்திட்டதாக கூறப்படும் அக்கடிதத்தின் பிரதியை தேசிய அமைப்புகளின் கூட்டமைப்பினர் அயலுறவுத்துறை அமைச்சுக்கு சென்று கையளித்துள்ள நிலையில் அயலுறவுத்துறை அமைச்சின் பிரதிநிதியொருவர் அதனைப் பெற்றுக் கொண்டார்.

குறித்த கடிதம் தொடர்பில் தேசப்பற்றுள்ள தேசிய முன்னணியின் செயலாளர் வசந்த பண்டார தெரிவித்ததாவது:

அமெரிக்க தூதுவர் அதிகளவில் இலங்கையின் உள்விவகாரங்களில் செல்வாக்கு செலுத்துகின்றார். அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் அரசியல் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

அமெரிக்க தூதுவர் இலங்கை இராணுவ தளபதியைக்கூட சந்தித்துள்ளார். ஏனைய அதிகாரிகளையும் சந்தித்துள்ள அவர் உத்தரவுகளை ☞2

## பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்கப்போகிறது அரசு

### ஜனாதிபதி தெரிவிப்பு

நாம் புதிய பசுமைப் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப போகிறோம். அதேபோல் டிஜிட்டல் பொருளாதாரத்தையும் கட்டமைப்போம். பசுமைப் பொருளாதாரத்திலும் பங்குப் பரிவர்த்தனை இருக்கும். அதற்குள் புதிய முறைமைகள் காணப்படும். அதேபோல் கடல் வழிப் பொருளாதாரம் ஒன்றை உருவாக்கவும் எதிர்பார்த்துள்ளோம் - என ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட 100 பாடசாலைகளில் மூலதனச் சந்தை பற்றிய சங்கங்களை நிறுவும்திட்டத்தின்முதலாவது நிகழ்வு கண்டி நுகவெல மத்திய கல்லூரியில் நேற்று முற்பகல்நடைபெற்றது. இந்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

''நாம் ஒரே இடத்தில் சுற்றிக் கொண்டு நின்றால் உலகம் நம்மைக் கடந்து செல்லும்'' என்ற பாடலை மேற்கோள் காட்டி கல்வி அமைச்சர் உரையாற்றினார். அதைமனதில்வைத்துத்தான் இன்று இந்த திட்டத்தைத் தொடங்கியுள்ளோம்.

20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கைத்தொழில் துறை யுகத்தின் அணுகுமுறைகளுடன் நாங்கள் நீண்ட காலமாக பணியாற்றினோம். அந்தக் கொள்கை அடிப்படையிலான அரசியலில் ஈடுபட்டோம். அதன் முடிவுகளை பற்றி இங்கு குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன்.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில், பொருளாதாரச் சிக்கல்கள் மற்றும் கோவிட் தொற்றுநோய் காரணமாக

## பெற்றோல், டீசல் விலைகள் அதிகரிப்பு

எரிபொருட்களின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஒரு லிற்றர் ஒக்டேன் 92 ரக பெற்றோலின் விலை 13 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 361 ரூபாவாகும்.

ஒக்டேன் 95 ரக பெற்றோலினவிலை 42 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதியவிலை 417 ரூபாவாகும்..

இதேவேளை, ஓட்டோ டீசல் விலை 35 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 341 ரூபாவாகும்.

சுப்பர்டீசல்ஒருரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. ☞2

## ஸ்டெம் கல்வி முறையை அரசு தொடங்கியுள்ளது

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

ஸ்டெம் எனப்படும் விஞ்ஞான, தொழில்நுட்ப, பொறியியல், கணிதக் கல்வி முறையைத் தொடங்கியுள்ளோம் என்று கல்வி அமைச்சர்சுசில்பிரேமஜயந்த தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட 100 பாடசாலைகளில் மூலதனச் சந்தை பற்றிய சங்கங்களை நிறுவும்திட்டத்தின்முதலாவது நிகழ்வு கண்டி நுகவெல மத்திய கல்லூரியில் நேற்று முற்பகல்நடைபெற்றது. இந்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ☞2

## கனடா அனுப்புவதாக மோசடி நாவற்குழி வாசி நேற்று கைது

கனடா அனுப்புவதாக கூறிவவுனியாவில்6பேரிடம் பணமோசடிசெய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்தவர் என்று வவுனியா பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியாவின் பட்டக்காடு, திருநாவற்குளம், தவசிகுளம், மல்லாவி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 6 நபர்களிடம் கனடா அனுப்புவதாக கூறியாழ்ப்பாணம்,நாவற்குழி பகுதியைச் சேர்ந்த இந்த நபர் பணம் பெற்றுள்ளார்.

ஒருவரிடம் இருந்து 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் 6 பேரிடம் பணம் பெற்றுள்ளதுடன், பிறிதொருவரிடம் 3 பவுண் சங்கிலி ஒன்றையும் பெற்றுள்ளார். எனினும் ☞2

### கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வில்

## மேலும் சட்ட வைத்திய அதிகாரிகளை தேவையேற்படும்போது இணைக்கலாம்

### நீதிமன்றில் இணைக்கம்

(ந.லோகதயாளன்.)

முல்லைத்தீவு கொக்குத் தொடுவாய்மனிதப்புதைகுழி அகழ்வின்போது

இன்னும்4சட்டவைத்திய அதிகாரிகளை இணைத்துக் கொள்ளவேண்டும் என்று பொலிஸார் நேற்று நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தனர். எனினும் பணிகளைத் தொடங்கிய பின்னர் தேவை ஏற்பட்டால் மேலதிக சட்ட வைத்திய அதிகாரிகளை இணைக்கலாம் என்று சட்டத்தரணிகள் இடித்துரைத்ததை அடுத்து, ஏற்பட்ட இணக்கத்திற்கு அமைவாக செப்டெம்பர் 5 மனிதப் புதைகுழி அகழ்வைத் தொடங்குவதற்கான கட்டளையை நீதிமன்றம் பிறப்பித்தது.

கொக்குத்தொடுவாய் மனிதபுதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் மன்றில் நீதிவான் தர்மலிங்கம்பிரதீபன்முன்பாக எடுத்துக்கொள்ளப்பட்டது. முல்லைத்தீவுசட்டவைத்திய அதிகாரி க.வாசுதேவா, யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி எஸ்.பிரணவன், ☞2

### சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க முடியாவிட்டால்

## அமைச்சர் டிரானுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

### மொட்டு கட்சி எம்.பி. தெரிவிப்பு

நாட்டில் சட்டம் ஒழுங்கு மற்றும்பாதுகாப்பானசூழலை ஏற்படுத்த முடியாவிட்டால், பொதுப்பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸுக்கு எதிராக நம்பிக்கையில்லாபிரேரணை கொண்டு வரப்படுமென பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துஅவர்மேலும் தெரிவித்ததாவது:

அதிகரித்து வரும் குற்றச் செயல்களை நிவர்த்தி செய்வதற்கும் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை ஒடுக்குவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு விடயதானம் தொடர்பில் சட்டமியற்றுபவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

குறைந்தபட்சம் ஒரு மாத காலத்திற்குள் சட்டம் ஒழுங்குமற்றும்பாதுகாப்பான சூழலை உறுதி செய்ய இயலவில்லை என்றால் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் டிரான் அலஸ் பதவி விலக வேண்டும். குறித்த செயற்பாட்டை அமைச்சர் அலஸ் நிறைவேற்றத்தவறிய பின்னரும் அமைச்சர் பதவியில் இருந்து விலகாவிட்டால், அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்கப் படும். இந்த விடயத்தில் தயங்கப் போவதில்லை - என்றார்.

### மனிதப் புதைகுழி வழக்கில் ஈடுபடும்

## சட்டவாளர்களுக்கு அச்சுறுத்தல் நீதிமன்றத்தினது கவனத்துக்கு

(சண்முகம் தவசீலன்)

கொக்குதொடுவாய் மனித புதைகுழி வழக்கில் ஈடுபட்டுள்ள சட்டத்தரணிகளுக்குஅரசபுலனாய்வுப் பிரிவினரால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக நேற்று முல்லைத்தீவுநீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

முல்லைத்தீவு நீதிவான் மன்றத்தில் நேற்று மனிதப் புதைகுழிஅகழ்வுதொடர்பான வழக்கு விசாரணைக்கு வந்தபோது இந்த விடயம் சட்டத்தரணிகளினால் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைகளுடன் தொடர்புபட்ட சட்டத்தரணிகள் கொக்குத் தொடுவாய்க்கு ஓகஸ்ட் 10 அன்று சென்றிருந்தனர். அது தொடர்பில் அரச புலனாய்வாளர்கள் அந்தப் பகுதிக் கிராம அலுவலரிடம் விசாரணைநடத்தியுள்ளனர். அத்தோடு வேறு பலரிடமும் அது தொடர்பில் விசாரணை நடத்தியுள்ளனர். சட்டத்தரணிகள்வருகைதந்தவாகன இலக்கங்கள், வந்தவர்களின் பெயர் விவரங்கள், எத்தனை பேர் வந்தனர் போன்ற விவரங்களைப் பெற்றுள்ளனர்.

சட்டத்தரணிகளின் விவரங்களைப்புலனாய்வுப் பிரிவினர் தன்னிடம் கேட்டு விசாரணை நடத்தினர் என்பதைகொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவல ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இருந்தது. ஜனாதிபதியாகப் பதவி வகிப்பவரே கட்சியின் தலைவராகவும் இருக்க வேண்டும்என்றவிடயத்தைக் காரணமாகக்காட்டிஒருவாறு மகிந்தவிடம் இருந்து தலைமைப் பதவியையும் கட்சியையும்பறித்தெடுத்தார் மைத்திரி.

அதுமுதற்கொண்டே கட்சியின் வீழ்ச்சிப் பயணம்தொடங்கிவிட்டது. மைத்திரிபால என்கிற அரசியல்வாதி எப்போதும் திடமான நிலைப்பாட்டைக் கொண்டவரல்லர். அடிக்கடி அவரது நிலைப்பாடுகள் மாறும். ஒன்றைச் சொல்லிவிட்டு இன்னொன்றைச்செய்வார். தான் வழங்கிய வாக்குறுதிகளுக்கு எல்லாம் மாறாக - தலைகீழான-விடயங்களைச் செயற்படுத்துவார். அதற்குப் பெரும் உதாரணம், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் போது ராஜபக்ச குடும்பத்தினரைக் கடுமையாக விமர்சித்தார். அவர்கள் கொள்ளையர்கள் என்றார். அவர்களைச் சிறையில்அடைக்கவேண்டும் என்றார். ஆனால், பின்னர் அதே மகிந்த ராஜபக்ஷவைத் தனது அதிகாரதைப் பயன்படுத்திப் பின்கதவால் பிரதமர் பதவியில் அமர்த்தினார். அவரது அந்தக் குணமே இப்போது கட்சிக்குள் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

கோட்டாபயராஜபக்ஷஆட்சி அதிகாரத்திலிருந்துமக்களால் விரட்டியடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, முதலில் பிரதமராகவும் பின்னர் ஜனாதிபதியாகவும் ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்தைப் பிடித்தது முதல் அவரது அமைச்சரவையில் இடம்பெறுவதில்லைஎன்கிற முடிவை சுதந்திரக் கட்சி எடுத்தது. ஆனால் கட்சியின் இந்த முடிவுக்கு எதிராக நிமல் சிறிபால டி சில்வா, மகிந்த அமரவீர, லசந்த அழகியவன்ன, சாமர சம்பத் தஸநாயக்க ஆகியோர் ரணிலோடு சேர்ந்துகொண்டார்கள். இவர்களுக்குஎதிராகமுறைப்படி கட்சியில் ஒழுக்காற்று நடவடிக்கைஎடுத்தார்மைத்திரிபால சிறிசேன. அனைவரும் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்கள். ஆனால், பின்னர் திடீரென நிமல் சிறிபால டி சில்வாவையும் அமரவீரவையும் கட்சியிலிருந்து நீக்கும்ஒழுக்காற்றுநடவடிக்கை முடிவை மீளப்பெற்ற மைத்திரி, அவர்களைக் கட்சிக்குத் திரும்புமாறும் அழைப்பு விடுத்தார்.

மைத்திரிக்கு எதிராக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் வழக்கில் உயர் நீதிமன்றம் அவரது தனிப்பட்ட நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் நட்டஈடு வழங்க வேண்டும் என்கிற உத்தரவு இருக்கிறது. கட்சியிலிருந்து ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாக விலக்கப்பட்டவர்கள் அதனை வைத்து அரசியல் செய்யக்கூடும் என்கிற அச்சமே நிமல் சிறிபால டி சில்வாவையும் அமரவீரவையும் மைத்திரி மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்வதற்கான காரணம் என்று சொல்லப்படுகின்றது. ஆனால் மைத்திரியின் இந்த முடிவை கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜெயசேகர உள்ளிட்ட பலரும் எதிர்க்கிறார்கள். ஒழுக்காற்று நடவடிக்கையில் எந்தத் தளர்வும் இருக்கக்கூடாது என்று பிடிவாதம் பிடிக்கிறார்கள்.

இந்த நிலையில் தேர்தல் வருவதையொட்டி கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தை குருநாகலில்நடத்துவதுஎன்று மைத்திரிமுடிவெடுத்தார். அது பொதுச்செயலர்தயாசிறியின் மாவட்டம். எனவேஅதனைச் சிறப்பாகச்செய்துமுடிப்பதற்கு தயாசிறி பெரிதும் பாடுபட்டு ஏற்பாடுகளைக் கவனித்தார். கட்சியின் மாவட்டக் கிளைக் கூட்டங்களை நடத்தி மாநாட்டுக்குத் தயார்ப்படுத்தினார். மாநாட்டுக்குரிய ஏற்பாடுகள்எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து ஒவ்வொன்றாகச் சிறப்பாகச் செய்தார். அனைத்து ஏற்பாடுகளும் பெரும்பாலும்முடிந்துவிட்டன. அழைப்பிதழ்கள்கூட அச்சிடப்பட்டுவிட்டன. அவற்றில் ஒரு தொகுதி அழைப்பிதழ்கள் வழங்கப்பட்டும்விட்டன.

இந்த நிலையில் கட்சியின் பொதுக் கூட்டத்தை குருநாகலில்நடத்தமுடியாது, கொழும்புக்கு மாற்றுவோம் என்று திடீரெனத் - தடாலடியாக - அறிவித்தார் மைத்திரி. குருநாகலில் கூட்டத்தை நடத்துவதில் பாதுகாப்புப் பிரச்சினைகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுவதால் இந்த முடிவு என்றும் தெரிவித்து பொதுச் செயலாளரையும் மற்றவர்களையும் அதிர வைத்திருக்கிறார். ஆனால், நிமல் சிறிபால டி சில்வாவும் அமரவீரவும் தாங்களும் பொதுக்கூட்டத்தில்பங்குபற்றுவதானால் அதனைக் கொழும்பில் நடத்தினால் மட்டுமே முடியும் என்று தெரிவித்ததைத்தொடர்ந்தே மைத்திரி இந்த முடிவை எடுத்தார் என்று சொல்லப்படுகின்றது. ஆனால், பொதுக் கூட்டத்தை இடம்மாற்றுவதற்கு தயாசிறியும்கட்சியில் உள்ள ஏனைய முக்கியமான தலைவர்களும் சம்மதிக்கவில்லை.

இதையடுத்துதயாசிறியை கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து அகற்றுவதற்கான முயற்சிகள் நடக்கின்றன. இதையொட்டி, தயாசிறி ஐக்கிய தேசியக் கட்சியில்இணைந்துவிட்டார் என்று சில ஊடகங்களில் செய்திகள்கூட வெளியாகி இருந்தன. அந்தளவிற்கு கட்சியில் தயாசிறியை ஓரங்கட்டுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. ஐக்கிய தேசியக் கட்சிக்குப் போகவில்லை என்று மறுத்தாலும், கட்சியில் தன்னைப் பதவியிலிருந்து அகற்ற நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது என்பதை தயாசிறி இப்போது வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ளார்.

ஒருபொதுச்செயலாளராக கட்சிக்குள்என்னநடக்கின்றது என்றே எனக்குத் தெரியவில்லை. கட்சிக்குள் பல விடயங்கள் நடக்கின்றன, ஆனால் எனக்குத் தெரியப்படுத்தப்படுவதில்லை. பொதுச்செயலாளர் பதவியிலிருந்து என்னை அகற்றுவதற்குச் சிலர் முயற்சிக்கின்றார்கள். அதன் மூலம் கட்சியைத் தங்கள் இஸ்டத்துக்கு ஆட்டிப்படைக்க நினைக்கிறார்கள். அவர்கள் கட்சியை எங்கே கொண்டு செல்ல முயற்சிக்கிறார்களோ அதை நோக்கிச் செல்வதற்கான முயற்சிகளைநான் எடுக்கும் போது, அவர்களின் முதல் இலக்காக இருப்பது கட்சியிலிருந்து என்னைத் தூக்கி எறிவதாகவே உள்ளது. ஆனால், கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் சரியான முடிவை எடுப்பார்கள் என்று நம்புகின்றேன்.

இவ்வாறு தயாசிறி தெரிவித்திருக்கிறார்.

உலகிற்கே முதல் பெண் பிரதமரைத்தந்தகட்சி. ஐக்கிய தேசியக்கட்சிக்கு எப்போதும் சிம்சொப்பனமாக - சவாலாக - நிமிர்ந்து நின்ற கட்சியின் இன்றையநிலைஉள்வீட்டுக் குத்துவெட்டுக்களால்துவண்டு கிடப்பதாகவே இருக்கின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நீதிமன்றக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் விகாரை அமைக்கும் பணியை உடன் நிறுத்துமாறு நீதிமன்றம் கட்டளை வழங்கிய பின்னரும் அங்கு கட்டுமானங்கள் இடம்பெற்றன என்பது தொடர்பில் நீதிமன்றில் செய்யப்பட்ட முறைப்பாடுமீது நடத்தப்பட்ட விசாரணையில் நீதிவான் இந்தத்தீர்ப்பைவழுங்கினார்.

வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரனால் 2023 பெப்ரவரி 23 அன்று, நீதிமன்றக் கட்டளைகளையை மீறி குருந்தூர்மலையில் தொடர்ந்தும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக, முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்குஅமைய, முல்லைத்தீவுநீதிமன்றில்தொடரப்பட்ட வழக்கில்நேற்றுஇந்தத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2022 ஜூன் 12 குருந்தூர்மலையில் நிர்மாணிக்கப்பட்ட பௌத்தவிகாரைக்கு கலசம் ஒன்றை நிறுவுவதற்கும், 'கபோக்' கல்லினாலான புத்தர் சிலைஒன்றை நிறுவுவதற்கும்முயற்சிமேற்கொள்ளப்பட்டது. இதற்கு எதிர்ப்புத்தெரிவித்துஆர்ப்பாட்டம் மேற்கொள்ள குருந்தூர்மலைக்குச் சென்றபோது அங்கு பௌத்தக் கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பரவிகரன்மற்றும் அவரோடு சென்றவர்கள் அவதானித்தனர்.

இந் நிலையில் குருந்தூர்மலை தொடர்பான வழக்கிலக்கம் ஏஆர்/673/18 இல் குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்து, குருந்தூர்மலையில் எந்தத் தரப்புக்களும்கட்டுமானங்கள் எவற்றினையும் மேற்கொள்ளக்கூடாதென முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் கட்டளை பிறப்பித்த பிற்பாடும் அங்கு தொடர்ந்தும் பௌத்த கட்டுமானப்பணிகள்இடம்பெறுவதாக நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தனர்.

அத்தோடு அவ்வாறு குருந்தூர் மலையில் பௌத்தகட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை தொடர்பில்புகைப்படஆதாரங்களையும் நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தனர்.

அதற்கமைய இந்த வழக்கினை ஆராய்ந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிவான் ரி.சரவணராஜா 2022 ஜூலை 14 அன்று, குருந்தூர்மலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள பௌத்தக் கட்டுமானங்களை அகற்றுமாறு உத்தரவிட்டிருந்தார்.

இந் நிலையில் 2022 ஜூலை 19 குறித்த குருந்தூர்மலை தொடர்பான வழக்கின் மீது சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து வருகைதந்த சட்டத்தரணிகளால் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு குறித்த வழக்கு மீளவும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது குருந் தூர்மலையில் அமைக்கப்பட்டுள்ளபௌத்தகட்டுமானங்களை அகற்ற முல்லைத்தீவு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருப்பதானது, இனங்களுக்கிடையில் சமாதானக்குலைவினை ஏற்படுத்துமெனசட்டமாஅதிபர் திணைக்களத்திலிருந்து வருகைதந்தசட்டத்தரணிகள் முல்லைத்தீவு நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தனர்.

சட்டமாஅதிபர்திணைக்கள சட்டத்தரணிகளின் கருத்துக்களைச் செவிமடுத்த நீதவான், அன்றையதினமே உடனடியாகக் குருந்தூர்மலைக்குச் சென்று களஆய்வை மேற்கொள்ளத் தீர்மானித்தார்.

அதனடிப்படையில் குருந்தூர்மலைக்குச் சென்ற நீதவான் அங்குள்ள நிலைமைகள்குறித்துஆய்வுசெய்து, குறிப்புக்களைஎடுத்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து இது தொடர்பில்கட்டளைவழங்கிய நீதிவான், 2022 ஜூன்மாதம் 12 முன்னிருந்த நிலையை அப்படியே பேணுமாறும், அதற்குமேல் கட்டுமானப் பணிகள் எதனையும் மேற்கொள்ளக்கூடாதெனவும் 2022 ஜூலை 19 அன்று கட்டளை பிறப்பித்திருந்தார்.

நீதிமன்றம் கட்டளை வழங்கிய பிற்பாடும், அதை மீறி குருந்தூர்மலையில் தொடர்ந்தும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

23.02.2023 அன்று குருந்தூர்மலைக்கு, தண்ணிமுறிப்புப் பகுதியைச் சேர்ந்த தமிழ் மக்களும், தமிழ் அரசியல்பிரதிநிதிகள் சிலரும் சென்றிருந்தபோது இதனை அவதானித்தனர். அது குறித்து ரவிகரன் நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டு வந்ததுடன் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திலும் முறையிட்டிருந்தார்.

இது தொடர்பாக ஆய்வு செய்வதற்காக ஜூலை 4 அன்று நீதிவான் ரி.சரவணராஜா மீண்டும் குருந்தூர்மலைக்குக் களப்பயணம் மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து பொலிஸார் மற்றும், தொல்லியல்திணைக்களத்தினரை இது தொடர்பிலானபதில்அறிக்கைகளை நீதிமன்றில்சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டது. இரு தரப்பினரும் நீதிமன்றில் முன்னிலையாகி இது தொடர்பிலான தமது தரப்பு விளங்கங்களை முன்வைத்திருந்தனர்.

அனைத்து தரப்புக்களினதும் விளங்கங்களும் பெற்றுக்கொள்ளப் பட்டதையடுத்து நீதிமன்றம் குறித்த விடயம் மீது ஓகஸ்ட் 31 தீர்ப்பு வழங்கப்படும் என்று அறிவித்திருந்தது. அந்தத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

2022 ஜூலை 19 முல்லைத்தீவு நீதிவான் குருந்தூர்மலைக்கு மேற்கொண்ட களப் பயணம் மற்றும், கடந்த ஜூலை 4 நீதிவானால் மேற்கொள்ளப்பட்ட களப் பயணம்ம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு இந்த வழக்கிற்கான தீர்ப்பு வழங்கப்படுகிறது.

நீதிமன்றினால் ஏற்கனவே வழங்கப்பட்ட கட்டளைக விரோதமாக, பணிகளை இடைநிறுத்த உத்தரவிட்ட பின்னரும் குருந்தூர்மலையில்மேலதிக கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

2022 ஜூலை 19 களப்பயணத்தின்போது நீதிமன்றம் அவதானித்த கல்லொன்று அங்கு ஏற்கனவே இருக்கவில்லை. அதேவேளை அங்கு புதிதாக பெயர்ப் பலகை ஒன்று அவதானிக்க முடிந்தது, அதனைப்போல இன்னும் பல விடயங்களையும் இரண்டாவது களப்பயணத்தின்போது அவதானிக்க முடிந்துள்ளது.

குருந்தூர்மலைப் பிரதேசத்தில் நீதிமன்றம் வழங்கியகட்டளையைப்பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு இருக்கிறது. எனினும் நீதிமன்றால் இதற்குமுன் வழங்கப்பட்ட கட்டளைகளை தொல்பொருள்திணைக்களப் பணிப்பாளர்நாயகம் சரிவரப் பின்பற்றவில்லை. நீதிமன்றக் கட்டளைகள் உதாசீனம் செய்யப்பட்டிருக்கின்றன -என்றுள்ளது.

## ஸ்டெம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1999ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்காவில் செய்யப்பட்ட ஆய்வின் பலனாக 2003 ஆம் ஆண்டில் ஸ்டெம் எனப்படும் விஞ்ஞான, தொழில்நுட்பம், பொறியியல், கணிதக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது உலகின் 100 நாடுகள் அந்த கல்வி முறையை பின்பற்றுகின்றன.

நாமும் தற்போது அந்த முறையைத் தொடங்கியுள்ளோம். பின்னர் அதற்குள் மேலும் ஓர் அங்கம் இணைக்கப்படும். ஸ்டீம் (STEAM) கல்வி முறைக்குள் வணிக மற்றும் நுண்கலை விடயப்பரப்புக்களும் உள்ளடக்கப்படும்.

எந்தவொரு கல்வி முறையும் ஒழுங்குமுறை அடிப்படையில் சாத்தியமானாலும் நடைமுறையில் எவ்வாறு சாத்தியமாகும் என்ற பிரச்சினைகள் தோன்றும். மாணவர்களுக்கு காசோலைகள், பரிவர்த்தனை பத்திரங்கள்பற்றிபெருமளவில் தெளிவு இல்லை.

இலங்கைக்குள் எந்த அளவிற்கு வணிக வங்கிகள் காணப்பட்டாலும் வணிக கல்வி பயிலும் மாணவர்கள் வங்கிக்கு சென்று அதன் செயற்பாடுகள் தொடர்பில் அறியமாட்டார்கள். குறைந்தளவில் சுற்றறிக்களைக்கூட கண்டதில்லை.

மூலதனச் சந்தை குறிப்பிட்ட சிலருக்காக மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இன்று ஆரம்பிக்கும் இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக முதலீட்டு தெரிவுடன் கூடிய மாணவர்களை பாடசாலைகளில் உருவாக்க முடியும் - என்றார்.

## இராஜதந்திர ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கியுள்ளார்.

அமெரிக்க தூதுவரின் நடவடிக்கைகள் குறித்து அவரை அழைத்து ஆலோசனை வழங்கவேண்டிய பொறுப்பு வெளிவிவகார அமைச்சருக்கு உள்ளது.

அமெரிக்கத்தூதுவர் வியன்னா உடன்படிக்கையை மீறியுள்ளார். அது பற்றியஅனைத்துக்குற்றச்சாட்டுக்களையும் ஆதராங்களுடன்பட்டியலிட்டுள்ளோம்.

அமெரிக்கத்எதூதுவர் காலத்துவச் செயலாளர் போன்றேசெயற்படுகின்றார். அமெரிக்கத்தூதுவர்அவ்வாறு செயற்படுகின்றபோது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆளுநர் போன்று செயற்படுகின்றார். அவர் கடந்த காலத்தில் காலணித்துவ செயலாளருக்கு வரவேற்பு அளித்த விதத்தினை நாம் பார்த்துள்ளோம்.

இறைமையுள்ள நாடு என்றஅடிப்படையில் எமக்கு இந்தச்செயற்பாடுகளாஜுல் பாரிய பிரச்சினைகள் உள்ளன. நாட்டின் சுயாதீன தன்மைக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக 1989ஆம் ஆண்டு பிரித்தானிய உயர்ஸ்தானிகர் இவ்வாறு செயற்பட்டபோது அவரை பெர்சோனா நொன் கிராட்டாவைப் பயன்படுத்தி வெளியேற்றினார்.

அதேபோன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்காது விட்டால் வெளிவிவகார அமைச்சர் பதவியில் இருந்து அலிசப்ரிவிலகவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளோம் - என்றார்.

## மேலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தரணிகளான எம்.ஏ.சுமந்திரன், வி.கே. நிரஞ்சன், ரணித்தாஞானராசா, வி.எஸ்.தனஞ்சயன், காணாமல் போனவர்களுக்கான அலுவலகத்தினுடைய சட்டத்தரணிகளான எஸ். துஷ்யந்தினி, ஜெ.தற்பரன், முல்லைத்தீவு மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணம், மாவட்ட செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ம.உமாமகள், கொக்குத் தொடுவாய் மத்தி கிராம அலுவலர், கிளிநொச்சி, முல்லைத்தீவு மின் பொறியியலாளர், கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளர் கா.சண்முகதாசன், கிளிநொச்சி முல்லைத்தீவு பிராந்திய பொலிஸ் மா அதிபர் சமுத்திரஜீவ, முல்லைத்தீவு உதவிபொலிஸ்அத்தியட்சகர் அசோக பெரேரா, கொக்குளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தடயவியல் பொலிஸ்பிரிவினர்உள்ளிட்ட பலரும் நீதிமன்றில் முன்னிலையாகி யிருந்தனர்.

வழக்கு விசாணை தொடங்கியதும், அகழ்வுப் பணிகளைத் துரிதப்படுத்தும் நோக்கோடு மேலும் 4 சட்ட வைத்திய அதிகாரிகளை இணைத்துக்கொள்ளவேண்டும்என்றுகோரும்அறிக்கையைப் பொலிஸார் தாக்கல் செய்தனர். இது யாரின் கோரிக்கை என நீதிவான் கேள்வி எழுப்பினார். தமது தரப்பு அறிக்கை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதாவது கொழும்பு, குருநாகல் வைத்தியசாலைகளின் மூன்று சட்ட வைத்திய அதகாரிகளும் றுகுணு பல்கலைக் கழக பேராசிரியரும் என நால்வரையும் இந்த விசாரணைகளில் இணைத்துக்கொள்ளுமாறு பொலிஸார் தமது அறிக்கையில் கேட்டிருந்தனர்.

அகழ்வுப் பணிகளைத் தொடங்குவதற்கு மாவட்ட நீதிபதி ஏற்கனவே உத்தரவு வழங்கிவிட்டார். அது தவிர இந்த விசாரணைகளில் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி தலைமையில் மேலும் இருவரும் இணைக்கப்பட்டுள்ளனர். இனிப் புதியவர்களை இணைத்துக் கொள்வதாயின் அதற்கான அனுமதி அவர்களுக்கான செலவு மதிப்பீடு அவர்களுக்கான ஒழுங்கள் என எல்லாவற்றையும் மேற்கொள்ளக் காலதாமதம் ஏற்படும். இதனால் தற்போது மேலதிக அதிகாரிகள் தேவை கிடையாது. அதிக பணி அல்லது மேலதிக தேவை என பணியில் ஈடுபடும் வைத்திய அதிகாரிகள் கோரிக்கை விடுத்தால் அப்போது இவர்களையும் இணைப்பது தொடர்பில் ஆராயலாம் எனச் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றில் தனது வாதத்தை முன்வைத்தார்.

மாவட்ட உதவிப்பொலிஸ் அத்தியட்சகரும் அந்த வாதத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து, அவசியம் ஏற்படும் பட்சத்தில் மேலதிக சட்ட வைத்திய அதிகாரிகளை இணைத்துக்கொள்வதுஎன்று இணக்கம் காணப்பட்டது.

அதைத்தொடர்ந்துஅகழ்வுப் பணிகளைத் தொடங்குவதற்கான பணத்தை விடுவிக்க மாவட்டச் செயலகம் தயாராக இருக்கின்றது என்று செயலக கணக்காளர் தெரிவித்தார். அந்த இடத்தில் கொட்டகைகள் அமைக்க ஒரு வாரம் தேவை என தொழில்நுட்ப உத்தியோகத்தர் தெரிவித்தபோதும் சட்ட வைத்தியஅதிகாரி 3 தினங்கள் போதும் எனக் கூறியதை அடுத்து அகழ்வுப்பணிகளை செப்டெம்பர் 5 தொடங்கும்படி நீதிமன்று கட்டளையிட்டது.

வழக்கு விசாரணைகளின்போது ஊடகங்களிற்கு அனைவரும் கருத்து தெரிவிக்ககூடாது என சட்ட வைத்திய அதிகாரியால் கோரப்பட்டது. அதற்கு உத்தியோகபூர்வமாக கருத்து தெரிவிக்கும் உரிமையை மாவட்ட சட்ட வைத்திய அதிகாரிக்கு வழங்கலாம் என்றும் அதேநேரம் வெளியில் கருத்துரைப்பதனை தடுக்க முடியாது எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

## பயங்கரவாத ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துக்களைக் கருத்தில் கொண்டுஅச்சட்டமூலத்திற்கு தேவையாக திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கு ஆளும் தரப்பு தீர்மானித்துள்ளது. அதற்கான அமைச்சரவைஅனுமதியேதற்போது வழங்கப்பட்டுள்ளது.

## கனடா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனடா அனுப்பாது மோசடி செய்தார்பாதிக்கப்பட்டநபர்கள் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்தனர்.

குறித்தமுறைப்பாட்டுக்கு அமைவாகவவுனியாதலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடி அவர்களின் வழிகாட்டலில் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ரத்நாயக்கா தலைமையில் குற்றத்தடுப்புபிரிவுபொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். சம்பவம் கைது செய்யப்பட்டவருக்குவயது 41.

(100)

## பெற்றோல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் புதிய விலை 359 ரூபாவாகும். மண்ணெண்ணெய்விலையும் 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, அதன் புதிய விலை 231 ரூபாவென அறிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டவாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரும் நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தினார்.

இது குறித்து நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்த சட்டவாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமானஎம்.ஏ.சுமந்திரன், புலனாய்வுப் பிரிவினர் என்பவர்கள் இரகசியமாகத் தகவல்களைப் பெற்றுக் கொள்பவர்கள், அதற்குமாறாக இங்கு வெளிப்படையான விசாரணைகள் இடம்பெற்றுள்ளன, சட்டத்தரணிகளை அச்சுறுத்துவதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இதுதொடர்பாகபொலிஸ் நிலையத்தின் முறைப்பாடு பதிவு செய்தால்நடவடிக்கை எடுக்க முடியும் என்று கொக்குளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிநீதினமற்றத்தில் தெரிவித்தார்

அச்சுறுத்தல் குறித்து நீதிமன்றத்தில் அறிக்கையிடப்பட்டு இப்பதன் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்

## எசல ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலமேமார்களை, ஜனாதிபதி வரவேற்றார்.

அதனையடுத்து தியவடன நிலமே ஜனாதிபதியிடத்தில் சம்பிரதாயபூர்வமாக ஆவணத்தைகையளித்தார். பெரஹெராவில் கலந்து கொண்டயானைகளைஅடையாளப்படுத்தும் வகையில் 'சிந்து' யானைக்குட்டிக்கு ஜனாதிபதியால் பழங்கள் வழங்கப்பட்டன. அதனையடுத்து பாரம்பரிய சம்பிரதாயங்களுக்கமைய ஜனாதிபதியுடன் நிலமேக்கள் புகைப்படம் எடுக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பெரஹெராவில்பங்குபற்றிய கலைஞர்களுக்கு பரிசுகளை வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது. 'எசலபெரஹெர பாரய' நிதி அன்பளிப்பு பிட்டிசர விகாரைக்கு ஜனாதிபதியால் வழங்கி வைக்கப்பட்டதை தொடர்ந்து, மத்திய மாகாண கலாசார அமைச்சினால் தயாரிக்கப்பட்ட 'பூஜனியதலதா சங்ஸ்குறுத்திய' (போற்றத்தக்க தலதா கலாசாரம்) என்று நூலும் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

பெரஹெராவை ஏற்பாடு செய்திருந்த தியவடனநிலமே உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மத மற்றும் தேசிய நிகழ்வாக மாத்திரமின்றி இலங்கையின் கலாசாரத்தை உலகறியச் செய்யும் வண்ணமயமான கலாசார கலை நிகழ்வான வரலாற்று சிறப்புமிக்க கண்டி எசல பெரஹெராவை பாதுகாத்து தொடர்ச்சியாக நடத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

யானைகளைபாதுகாக்க வேண்டியஅதேநேரம், எமது பாரம்பரியசம்பிரதாயங்களை பாதுகாத்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும். பெரஹெராவுக்கான யானைகளை பெற்றுக்கொள்வதுதொடர்பில் எழுந்துள்ளபிரச்சினைகளை பேச்சுமூலம்தீர்த்துக்கொள்ள வேண்டும்என்றும்ஜனாதிபதி தெரிவித்தார்.

அடுத்தவருடத்தில் சுற்றுலாத்துறையில் முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கான வேலைத்திட்டத்தில் கண்டிவரலாற்றுசிறப்புமிக்க எசல பெரஹெரா முக்கிய பங்கு வகிக்கும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, இராஜாங்க அமைச்சர்களானலொஹான் ரத்வத்தே, திலும் அமுனுகம, பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏபக்கநாயக்க, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன மற்றும் அரசாங்க அதிகாரிகள், முப்படைபிரதானிகள், தியவடன நிலமே பிரதீப் நிலங்க தேல, ஏனையநிலமேமார்கள் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## பசுமைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் வங்குரோத்தடைந்த நாடாக மாறினோம். ஆனால் நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து காப்பாற்றும் திட்டத்தை இப்போது ஆரம்பித்துள்ளேன். அதனை எமது ஆட்சி வெற்றிகரமாக முன்னெடுத்து வருகிறது.

ஒரு நாடு என்ற வகையில் மீண்டும் படுகுழியில் விழாமல் எப்படி முன்னேறுவது என்பதில் கவனம் செலுத்தவேண்டும். 20ஆம் நூற்றாண்டின் மத்தியில் கடைப்பிடிக்கப்பட்டகொள்கைகளைத் தொடர்வதா அல்லது புதிதாகச் சிந்தித்துப் புதிய பாதையில் செல்வதா என்பதைத்தீர்மானிக்கவேண்டும்.

தொடர்ச்சி 9 ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

# சகல எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைக்க வேண்டும் என்பதே எமது பிரதான நோக்கம்

## சரித்த ஹேரத் கூறுகிறார்



அரசாங்கத்தைதோற்கடிப்பதற்காக அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைக்க வேண்டும் என்பதே சுதந்திர மக்கள் காங்கிரஸின் பிரதான நோக்கம் என்று நாடாளு மன்ற உறுப்பினர் சரித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தி யாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

எதிர்க்கட்சிகளை சேர்ந்த சில கட்சிகளுடன் நாம் பேச்சுகளை ஆரம்பித்துள்ளோம்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பியுடனனும் பேச்சு நடத்தி வருகிறோம்.

இந்த அரசாங்கம் எதிர்க் கட்சிகளுக்குள் பிளவை ஏற்படுத்த தற்போது முயற்சித்து வருகிறது.

அரசாங்கத்தின் இந்த முயற்சியை தோற்கடித்து, ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் எதிர்க்கட்சித் தரப்பினர் வெற்றி பெற வேண்டும் என்பதுதான் எமது நோக்கமாகும்.

சுதந்திர மக்கள் காங்கிரஸ் என்ற வகையில் நாம் இன்னமும் ஜனாதி பதி வேட்பாளரை களமிறக்குவது தொடர்பாகத் தீர்மானிக்கவில்லை.

எவ்வாறாயினும், இந்த அரசாங்கத்தைத் தோற்கடிக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்தால் அது மிகவும் சிறப்பாக அமையும்.

இப்போதுவரையான பேச்சுகள் சிறந்த முறையி லேயே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எதிர்க்கட்சிகளை ஒன்றி ணைக்கவே நாம் முயற்சித்து வருகிறோம்.

ஐக்கிய மக்கள் சக்திக்கும் ஜே.வி.பி.க்கும் மற்றும் ஏனைய கட்சிகளுக்கும் பல்வேறு கொள்கைகள் இருக்கலாம்.

இதுதான் அரசியல். இவ்வாறான கொள்கைகள் உடைய- வர்களை இணைப்பதுதான் தற்போது அவசியமாக உள்ளது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் என்பது எமக்கு சவாலாக இருக்காது.

ஏனெனில், மொட்டுக் கட்சியோ ஐக்கிய தேசியக் கட்சியோ அடுத்து நிச்சயமாக ஆட்சியமைக்காது' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(05)



# கரன்னகொட அறிக்கையின் அடிப்படையில் விசாரணை

கடந்த ஆண்டு மே மாதம் 09 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாக குற்றப்புலனாய்வு பிரிவு புதிய விசாரணையை ஆரம்பித்துள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் திரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

வன்முறைகளைத் தடுக்கத் தவறியதாகக் கூறி அப்போதைய இராணு- வத் தளபதி சவேந்திர சில் வா, பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன உள்ளிட்ட பலருக்கு எதிரான வழக்கு பின்னர் வாபஸ் பெறப்பட்டது.

இராணுவம், பொலிஸ் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் செய்த தவறுகள், வன்மு- றைகள் மற்றும் அடுத்தடுத்த சம்பவங்கள் தொடர்பாக கடற்படையின் அட்மிரல் வசந்த கரன்னாகொட விசாரணையை மேற் கொண்டார்.

இந்நிலையில் ஜனாதி பதியின் செயலாளரிடம் இருந்து இந்த வன்முறை சம்பவங்கள் தொடர்பான அறிக்கையின் பிரதி பெறப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனப் பொது பாதுகாப்பு அமைச்சர் கூறி யுள்ளார். (05)

# கவிஞர் சூரியகலா ஜென்சன் எழுதிய 5 நூல்களின் வெளியீடு













கவிஞர் சூரியகலா ஆ.ஜென்சன் றொனால்ட் பொதுச்சுகாதார பரிசோதகர் எழுதிய 5 நூல்களின் வெளியீட்டுவிழா புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொடிகாமம் ஏ9 வீதியில் அமைந்துள்ள நட்சத்திரமஹால் மண்டபத்தில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.சுதோக்குமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சிவசுதன், உசன் பவுண்டேசன் உபதலைவரும் வைத்தியருமான ஐ.என். ஜபநாமகணேசன் உலக வள்ளுவர் வழி இணையப் பள்ளியின் இயக்குநர் ஜோதி ஜெயக்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் உயிர்ப்பு எனப்படுகின்ற தாய்சேய் நலம் தொடர்பான சுகாதார மேம்பாட்டு நூலும் விழிப்பு எனப்படுகின்ற தொற்றா நோய்களைத் தடுப்பதற்கான சுகாதார மேம்பாட்டு நூலும் காப்பு எனப்படுகின்ற உணவுப்பாதுகாப்பு சம்பந்தமான சுகாதார மேம்பாட்டு நூலும் திறப்பு எனப்படுகின்ற நேர்மயமான சிந்தனைகளைக் கட்டியெழுப்புதல் எனும் நூலும் வனப்பு எனப்படுகின்ற கவிதைநூலும் வெளியிடப்பட்டன.

ஒரு மேடையில் ஓர் எழுத்தாளரால் 5 நூல்கள் வெளியிடப்பட்டது. பிரதம விருந்தினர் நூல்களை வெளியிட்டு வைக்க கொடிகாமம் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் ந.பாபுஜி முதல் பிரதியை பெற்றுக் கொண்டார். (05)

# 12, 263 புதிய வாகனங்கள் இந்தாண்டு மட்டும் பதிவு

இந்த ஆண்டில் இதுவரை மொத்தம் 12 ஆயிரத்து 263 புதிய வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

2023 இல் 8,304 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 1,727 ஏனைய வாகனங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன என மோட்டார் போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.(05)

# மட்டு. ஊடகவியலாளர் நினைவு தூபியில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டியால் பரபரப்பு

மட்டக்களப்பில் புதன்கிழமை வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி அமலராஸ் அமலநாயகியால் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் உள்ள படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலளார்களின் நினைவுத்தூபியில் அமலராஸ் அமலநாயகிக்கு எதிராக மர்ம நபர்களால் சுவரொட்டியொன்று ஒட்டப்பட்டுள்ளது.

குறித்த சுவரெட்டியில் ' நமக்கான டொழுரை(டொலரை) பெற பேரணியில் கலந்துகொள்ள வாருங்கள் ' எனக் குறிப்பிடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இச் சுவரொட்டி குறித்து கண்டனம் தெரிவித்துள்ள ஊடகவியலாளர்கள், வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் மட்டக்களப்பு தலைவிக்கும் ஊடக வியலாளர்களுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விதமாக இது உள்ளதாகவும் ,இவ்வாறாக செயற்பாடுகளை உரியவர்கள் கைவிடவேண்டும் எனவும் தெரிவித்திருந்தனர். (05)



# அரசின் நலன்புரிக் கொடுப்பனவை பெறமுயன்றவர்களுக்கு ஏமாற்றம்

கிளிநொச்சியில் புதன்கிழமை அரசின் அஸ்வெஸ்ம நலன்புரி கொடுப்பனவை பெற்றுக்கொள்ள பொதுமக்கள், மக்கள் வங்கியில் குவிந்தனர்.

எனினும் அம்மக்களில் சிலருக்கே கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாகவும், இதனால் பலர் ஏமாற்றத்துடன் தமது வீடுகளுக்குத் திரும்பிச்சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# ஐக்கிய தேசியக் கட்சியுடன் எவரும் இணையமாட்டார்கள்

## அடித்துக்கூறுகிறார் ஹர்ஷன ராஜகருணா



ஐக்கிய தேசியக் கட்சியின் 76 ஆவது வருடாந்த மாநாட்டில் தமது கட்சியின் உறுப்பினர்கள் எவரும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ள மாட்டார்கள் என ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவை வழங்குவார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியினர் தொடர்ந்தும் தெரிவித்து வரும் நிலையில் ஹர்ஷன ராஜகருணா இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு வருடத்துக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்ட போது ஹரின் பெர்னாண்டோவும் மனுஷநாணயக்காரவுமே அவர்களின் அழைப்பை ஏற்றுக்கொண்டனர் எனக் கூறினார்.

மேலும் கடந்த 2020 இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் டயானா கமகே, ராஜபக்ஷக்களுக்கு ஆதரவை வழங்கியதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா குறிப்பிட்டார்.

ராஜபக்ஷக்களுடன் இணைந்து கொண்டதன் மூலம், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மீள முடியாத ஒரு தவறைச் செய்துள்ளார் என்றும் ஹர்- ஷன ராஜகருணா சுட்டிக்காட்டினார்.

கடந்த பொதுத்தேர்தலில் ஏழு தேசியப் பட்டியல் ஆசங்களை பெற்றுக்கொண்ட தமது கட்சியை பார்த்து ஐக்கிய தேசியக் கட்சி அஞ்சுவதாகவும் அவர் தெரிவித்தார். (05)

# கிளிநொச்சியில் விமர்சையாக நடைபெற்ற மகா குடமுழுக்கு





கிளிநொச்சி, இராமநாதபுரம் புதுக்காட்டு பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட ஐயப்பன் ஆலயத்தின் ராஜகோபுரம் மற்றும் மூல- மூர்த்தி பரிபாலன மூர்த்திகளுக்கான மாகாகும்பாபிகே பெருவிழா புதன்கிழமை மிக சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது கும்பங்கள் யானை மீது வைக்கப்பட்டு உள் வீதி மற்றும் வெளிவீதி ஊடாக அழைத்துவரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## இனியாவது நேர்மையாக நடக்கவேண்டும் ஜனாதிபதி

குருந்தூர்மலையில் நீதிமன்ற உத்தரவை மீறி தொல்பொருள் திணைக்களத்தினால் கட்டுமானங்கள் கட்டப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. குருந்தூர்மலை தொடர்பாக முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கில், இந்த விடயம் தொடர்பாக நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அதாவது, குருந்தூர்மலையில் தொல்பொருள்சின்னங்களின்மீதுவிகாரைஅமைக்கும் பணிகளை அப்படியே நிறுத்துமாறு நீதிமன்றம் இட்ட கட்டளையை மீறி தொடர்ந்தும் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை உறுதிப்படுத்தி இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

இது தொல்பொருள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு. நீதிமன்றம் இட்ட கட்டளையை அரச திணைக்களம் ஒன்றே உதாசீனம் செய்து அவமதித்திருக்கிறது என்பதைத் தீர்ப்பு வெளிப்படுத்தியிருக்கின்றது. குருந்தூர்மலையில் கட்டுமானத்தை நிறுத்தும்படி உத்தரவிடுவதற்கு முன்னதாக, அங்கு அனுமதியின்றிக் கட்டப்பட்ட விகாரையை அகற்றுமாறு நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டிருந்தது. அப்படிச் செய்தால் அது சமூக அமைதியின்மையைத் தோற்றுவிக்கும் என்று சட்டமா அதிபர் திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை அடுத்தே கட்டுமனாப் பணிகளை உடன் நிறுத்துமாறு நீதிமன்றம் மீண்டும் கட்டளை பிறப்பித்திருந்தது. அப்படியிருந்தும் அதனை மதிக்காமல் செயற்பட்டிருக்கின்றது தொல்பொருள் திணைக்களம்.

சிங்கள, பௌத்த மேலாதிக்க வாத்தத்தால் அந்தத் திணைக்களம் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டுள்ளது என்பதற்கு இதுவே முதன்மைச் சான்று. நீதிமன்ற உத்தரவுகளையே மதிக்காது அவமதிக்கும் துணிச்சலை பௌத்த சிங்கள மேலாதிக்கவாதம்தான் அதற்கு வழங்கியிருக்கிறது. சட்டத்தை மீறியும் தான் தோன்றித்தனமாகவும் தான் என்ன செய்தாலும் தன்னை எதுவும் செய்யமுடியாது – செய்வதற்கு சிங்கள பௌத்த மேலாதிக்கவாதம் அனுமதிக்காது – என்கிற துணிச்சல்தான் திணைக்களம் இவ்வளவு மோசமாக நடந்துகொள்வதற்குக் காரணம்.

சட்டம் எல்லோருக்கும் சமம் என்கிற அடிப்படையில் விகாரையை அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டபோதே அதனை அகற்றி இருக்கவேண்டும். சமூக அமைதியின்மையைக் காரணம் காட்டி அதனை நிறுத்தியது ஆட்சியாளர்களின் பெருந் தவறு. இப்போது மீண்டும் தொல்பொருள் திணைக்களம் தவறிழைத்திருக்கிறது என்பது நிரூபணமாகியிருக்கிறது. இனியாவது அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேர்மையாகச் செயற்பட்டு சட்டத்தின் ஆட்சியை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மீது இது தொடர்பில் விசாரணை நடத்தி அதற்குக் காரணமானவர்களைத் தண்டிப்பதுடன், நீதிமன்றத்தின் உத்தரவை முறைப்படி செயற்படுத்த அவர்களை நிர்ப்பந்திக்கவேண்டும்.

குருந்தூர்மலையில் விகாரை அமைக்கப்பட்டதே உண்மையில் அங்கு அமைதியின்மைக்குக் காரணம். அதனால்தான் ஏனைய மதத்தவர்களும் அங்கு ஆலயம் அமைக்கவேண்டும் என்கிற பிடிவாதத்தில் நிற்கிறார்கள். இனி, சட்டவிரோத விகாரையைக் காப்பாற்றுவதற்காக அங்கு சைவ ஆலயம் அமைப்பது என்கிற சமாளிப்புக்களை அரங்கேற்றுவதைவிடுத்து, சட்டத்தை முறையாக நிலைநாட்ட அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதன் மூலமே இந்த நாட்டில் நிலையான அமைதியை ஏற்படுத்த முடியும். சட்டத்தின் நிலையான ஆட்சியின் மூலமே இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தையும் உருவாக்க முடியும். நாட்டின் முன்னேற்றத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் நீதியும் நியாயமும் மிக முக்கியமானவை. அவற்றை நிலைநாட்டுவதற்கு நேர்மையான அர்ப்பணிப்புள்ள நடவடிக்கைகளை அரசுத் தலைவர் எடுக்கவேண்டும்.



## எது தொப்புள்கொடி உறவு?

**என் சத்திய மூர்த்தி**

இனப்பிரச்சினையில், தமிழ் நாடு மக்களின் ஆதரவும், இந்திய அரசின் அனுசரணையும் தேவை என்பதே, ஆண்டாண்டு காலத்திய இலங்கை தமிழ் மக்களின் அபிலாசை. அதுவே அவர்களது, சமூக-அரசியல் தலைமைகளின் கோரிக்கையும்கூட. அவர்களிடையே உள்ள வேறுபாடுகள் எல்லாம், எத்தகைய கோரிக்கையை இந்தியா, தங்களுக்கு நிறைவேற்றித் தரவேண்டும் என்பதில்தான்.

அந்த விதத்தில், தங்களது கோரிக்கைகள் குறித்து, தமிழ் நாட்டு அரசியல் வாதிகள் யாராவது ஆதரவு செய்தி வெளியிட்டால், அதுவே அடுத்த பல நாள்களுக்கும் பேசுபொருளாக இருக்கும். அதிலும் குறிப்பாக, தமிழ்நாட்டின் முதல்வர் யாராக இருந்தாலும், அவரிடமிருந்து ஆதரவு சமிக்ஞைகளுக்காக காத்திருப்பவர்கள்.

இதற்கு ஒரு படி மேல் போய், எம்ஜிஆர், ஜெயலலிதா ஆதரவு, அதன் காரணமாகவே கருணாநிதி எதிர்ப்பு என்று அரசியல் செய்யும் இலங்கை தமிழ்தலைவர்கள் இருந்தனர். இன்றும் உள்ளனர். கருணாநிதியை 'துரோகி' என்று முத்திரை குத்தவும் அவர்கள் தயங்கியது இல்லை.

ஆனால், அதே கருணாநிதியின் மகன், ஸ்டாலின் தமிழ் நாடு முதல்வரானதும்; அவர்களில் பலரும் ஒருவருக்கு ஒருவர் போட்டியாக ஜால்ரா அடித்தது பழங்கதை. இடைப்பட்ட காலத்தில், மற்றவர்களுக்குத் தெரியாமல், ஸ்டாலினை காண கோரிக்கை கடிதம் அனுப்பியவர்களும் இதில் அடக்கம். ஆனால், அதே முதல்வர் ஸ்டாலினோ, அல்லது தமிழ் நாட்டு மக்களோ கோரிக்கை விடுத்து, தமிழ் நாடு ஆதரவு நிலை கோரும் விடயம் ஒன்று உள்ளது. அவர்கள் அவ்வாறு வெளிப்படையாக ஆதரவு கோரவில்லை என்பது வேறு விடயம்.

அவ்வாறு கோரிக்கை விடுத்து, தங்களது சகோதரர்களை தர்மசங்கடத்திற்குள் தள்ள தமிழ்நாடு தலைவர்கள் விரும்பவில்லை என்பது ஒரு புறம். கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை தமிழ் தலைவர்களுடன் பழகியதில் அவர்கள் எத்தகைய சுயநலவாதிகள் என்பதை அறிந்தவர்கள் என்பது மறுபுறம்.

காரணம், அவ்வாறு தமிழ் நாட்டில் இருந்து கோரிக்கை வருவதற்கு முன்னரே, அதனை எதிர்பார்ப்பது போல், மறுதலிப்பவர்களே இங்கே அதிகம் உள்ளனர் என்பதே உண்மை.

### கைகொட்டி சிரிப்பு

இங்கு, மீனவர் பிரச்சினை என்பது, வடக்கு-கிழக்கு மீனவர்களுக்கும், தென் தமிழ் நாட்டு மீனவர்களுக்கும் பொது-வான பிரச்சினை. இனப்பிரச்சினையில் தொப்புள்கொடி உறவு பேசும் இலங்கை தமிழர்கள், மீனவர் பிரச்சினை என்று வந்து விட்டால், எப்போதும் இல்லாத ஆக்ரோஷத்துடன் தமிழ்நாட்டு சகோதரர்களை எதிர்ப்பார்கள்.

அப்போது மட்டும், இலங்கை அவர்களுக்கு ஒரே நாடு, சிங்களம், தமிழ் என்ற இரண்டு தேசங்கள் இல்லை. இந்தியா, இலங்கை என்ற இரு நாடுகளின் கடல் பிரதேசங்களை குறிக்கும் (அல்லது பிரிக்கும்) கற்பனையான கடல் எல்லைகோட்டின் இறையாண்மை மதிக்கப்படவேண்டும், என்பன போன்ற வாதங்கள் முன்வைக்கப்படும்.

குறிப்பாக, இலங்கையின் வடக்கு, கிழக்கு மீனவர்களும் அவர்களது சமுதாய தலைவர்களும் மட்டுமே இவ்வாறு வாதம் செய்பவர்கள் அல்லர். அவர்களுக்கு அப்பாலும் சென்று, மூத்த, முக்கிய தமிழ் அரசியல் தலைவர்களே அவ்வாறு அரசியல் செய்பவர்கள்தான். குறிப்பாக, முந்தைய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைக் கூறலாம்.

தற்போதும், தமிழ் அரசு கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான சுமந்திரன், முந்தைய நல்லாட்சி அரசின் காலத்தில் எல்லை தாண்டி, இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிப்போருக்கான தண்டனை காலத்தையும் அபராத தொகையையும் உயர்த்துவதற்கான தனிநபர் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்து நிறைவேற்றினார். அப்போது பிரதமராக இருந்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே, சுமந்திரனின் சட்டமுன்வடிவை அரச தீர்மானமாக மாற்றி, நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்ற வழிசெய்தார்.

அந்தச் சட்டம், இந்திய மீனவர்கள், குறிப்பாக தென் தமிழக மீனவர்களை குறிவைத்தே நிறைவேற்றப்பட்டது. அதனை தமிழ்வகையாறாக்கள் அறிந்தே வைத்திருந்தார்கள். நிலைமை அப்படி இருக்கும்போது, அவர்கள் அவ்வப்போது குறைகூறும் சிங்களப் பேரினவாதிகளுக்கு என்ன வந்தது? மீனவர் பிரச்சினை காரணமாக, இரு நாடுகளிலும் உள்ள தமிழர்கள் அடித்துக்கொண்டால், அவர்கள் என்ன வேண்டாமென்றா சொல்லியிருப்பார்கள்? அதிலும் குறிப்பாக, இந்திய தமிழ் மீனவர்களை இங்குள்ள தமிழ் அரசியல்வாதிகள் போட்டுத் தாக்கும்போது, அவர்கள் மனதிற்கு உள்ளேயே, கைகொட்டிச் சிரித்திருப்பார்கள்.

சுமந்திரன் இவ்வாறு முன்னெடுப்புகளை செய்வதற்கு முன்னரே, தமிழ் அரசு கட்சி தலைமை கூட்டங்களில், தமிழ் நாட்டுடனான மீனவர் பிரச்சினை, விவாதப்பொருள் ஆக்கப்பட்டது. அது குறித்து அடுத்தடுத்த காலகட்டத்தில், கட்சி தீர்மானங்களை நிறைவேற்றியிருந்தது. அது அந்தக் கட்சியிலேயே எத்தனை பேருக்கு நினைவு இருக்கிறது என்பது தெரியவில்லை. அவர்களில் எத்தனை பேர் அந்த தீர்மானத்தை படித்து, அறிந்து, புரிந்து கொண்டிருந்தார்கள் என்பது அப்போதுகூடத் தெரியவில்லை.

### தாயும் பிள்ளையும்...

இதனால் எல்லாம், தமிழ் நாட்டு மீனவர்கள் செய்வதெல்லாம் சரியானது என்பதல்ல பொருள். தாயும் பிள்ளையும் ஒன்றானாலும், வாயும் வயிறும் வேறு என்பது பழமொழி, ஏன், இந்தியாவிற்குள்ளேயே, தமிழ்நாட்டு கடற்புற கிராமங்களிடையேயும் இது போன்ற பிரச்சினைகள் அவ்வப்போது வெடித்து வருகின்றன.

இதுவே ஒரே நாட்டில் அல்லது மாகாணத்தில் அல்லது மாவட்டத்தில் உள்ள இரண்டு மீனவ கிராமங்களுக்கும் பொருந்தும். என்றாலும், அந்தக் கிராமங்களுக்கு இடையேயான பாரம்பரிய உரிமைகள் மற்றும் கண்ணுக்கு தெரியாத எல்லைகோடுகள் இருந்து வருகின்றன. அவற்றை பிறிதொரு கிராமத்தை சேர்ந்த மீனவர்கள் தொடர்ந்து மீறும்போது, அவர்கள் சிறை எடுக்கப்படுவதும், பிரச்சினையை முடிவிற்கு கொண்டுவர இரண்டு கிராம தஷ்லைவர்களும் பஞ்சாயத்து கூடுவ-தும்கூட வழக்கமான விடயமே.

ஆனால், இரு நாட்டு தமிழ் மீனவர்கள் பிரச்சினை என்பது அத்தனை சுலபமானது அல்ல. இனப்போருக்கு பிந்தைய காலகட்டத்தில், இலங்கை தமிழ் மீனவர்கள் தொழில் செய்ய முயன்ற போது, அவர்கள் கற்று தேர்ந்திருந்த மீன்பிடி முறைகள், மீன் படகுகள் மற்றும் மீன் வலைகள்கூட நீள-அகலங்களில் முற்றிலும் மாறி இருந்தன.

இந்திய மீனவர்கள் இழுவை படகு, சுருக்குமடி வலை போன்ற மீன்பிடி முறைகளில் கைதேர்ந்திருந்தார்கள். அது மட்டுமல்ல. இலங்கையில் இன்றளவும், அது போன்ற மீன்பிடி முறைகள், படகுகள் மற்றும் வலைகள் தொடர்ந்து தடைசெய்-யப்பட்டுள்ளன. எனவே தங்களது கடற்பரப்பிலேயே இந்திய மீனவர்களை எதிர்கொள்ளும்போது, இலங்கைத் தமிழ் மீனவர்கள் பெரும் துன்பத்திற்கும் நஷ்டத்திற்கும் உள்ளாகிறார்கள் என்பது உண்மையே.

இலங்கைத் தமிழ் மீனவர்களின் கவலை எல்லாம், இந்திய மீனவர்களின் அதீத ஆசை காரணமாக, இந்தியாவின் இராமேஸ்வரம் பகுதி போல் தங்கள் கடற்பரப்பிலும்;, மீன் உற்பத்தி முற்றிலுமாக அழிந்து விடுமோ என்பதே. என்றாலும், இலங்கை தமிழ் மீனவர்களின் காத்திரமான கவலைகளுக்கு அப்பால், அதனை உள்நாட்டு அரசியலாக்கி, தங்களது தேர்தல் அரசியலில் அவர்களது கவலையை பகடைகாயாக மாற்றுவர்களே இங்கு இருக்கிறார்கள்.

சுமந்திரன் பெயர் மட்டுமே இங்கே முன்வைக்கப்பட்டதால், அவர்தான் தவறிழைத்தவர் என்றல்ல பொருள். அவர் மட்டுமே தவறிழைத்தவர் என்றும் தவறுதலாக புரிந்து கொள்ளக்கூடாது.

### மக்கள் பிரச்சினை

இந்தியா, இலங்கை ஆகிய இரண்டு அண்டை நாடுகளும் பெரிதும் நட்புறவு கொண்டவை. என்றாலும், அவற்றிடையே சீனா உள்ளிட்ட சில-பல பிரச்சினைகள் தொடர்ந்து இருந்து-வந்துள்ளன. அவற்றில், மீனவர் பிரச்சினையே மிகவும் முக்கியமானது. காரணம், இது மட்டுமே இரண்டு நாடுகளுக்கும் இடையேயான மக்கள் சார்ந்த பிரச்சினை. அதிலும் குறிப்பாக, இரு நாடுகளிலும் உள்ள குறிப்பிட்ட தொழில் சமூகத்தினரிடையேயான வாழ்வாதாரப் பிரச்சினை.

இரு நாடுகளுக்கும் இடையேயான மற்ற பிரச்சினைகளை இரண்டு நாட்டு அரசுகளும் அவற்றின் தலைமைகளும் பேசித் தீர்த்துக்கொள்ளமுடியும். அவர்கள் அவ்வாறு செய்கிறார்களா, என்பது வேறு விடயம். ஆனால், மீனவர் பிரச்சினையை அவ்வாறெல்லாம், அரச தரப்பினர் மட் டுமே பேசி தீர்த்துவிட முடியாது. அந்த பிரச்சினையில் சிக்கி தவிக்கும் இருநாட்டு மீனவர்கள் தலைவர்களும்கூட சேர்ந்து பேசி நல்ல முடிவை எட்டவேண்டும். இவ்வாறான முயற்சிகள் முன்பு எடுக்கப்பட்டாலும், அது தொடரப்படவில்லை என்பது வருத்தப்பட வேண்டிய விடயம்.

இந்திய மீனவர்களை பொறுத்த வரையில், அவர்களுக்கும் இலங்கை கடற்பகுதியில் மீன்பிடி உரிமை வேண்டும். அதனை இலங்கை தமிழ் மீனவர்கள் மறுக்கவில்லை. ஆனால், அதனையே காரணம் காட்டி, நாட்டின் வடக்கு-கிழக்கு மீன்பிடி தளங்களையும் இராமேஸ்வரம் பகுதி போல், மீன்-வறட்சி கடலாக மாற்றினால், யாருக்கு என்ன லாபம்?

நிலைமை இவ்வாறு இருந்தாலும், இலங்கைக் கடற்படையினரின் அதீத தலையீடுகளும், தமிழ் நாடு மீனவர்களின் கைது படலங்களுமே, தொப்புள்கொடி உறவை தொடர்ந்து கேள்விகுறி ஆக்கி வருகிறது. அந்த வகையில், இரு நாட்டு மீனவர் பிரதிநிதிகள், முன்பு போலவே, தொடர்ந்து பேச்சு நடத்தினால், இந்தப் பிரச்சினைக்கு விடிவு காலம் பிறக்கலாம். பிறக்காமலும் இருக்கலாம். ஆனால், அதற்காக முயற்சி செய்யாமல் இருக்கவேண்டாம்.

இலங்கை, இந்தியா ஆகிய இரண்டு நாடுகளுக்கும் இடையேயான கடல் எல்லை கோடு, 1974 கைசாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே செயல்பாட்டிற்கு வந்தது. அதற்கு முன்னர், இரண்டு நாடுகளையும், இங்கிலாந்து தனித்தனியே ஆண்டு வந்தபோதும், அதற்கு முன்னர், இலங்கையை மட்டும் பிரான்ஸ் மற்றும் போர்த்துகீசியர்கள் போன்ற பிற ஐரோப்பிய காலனி அரசுகள் ஆண்டபோதும், இவ்வாறு எல்லை தாண்டிய மீன்பிடிப்பு, பிரச்சினையாக இருக்கவில்லை. ஏன், அதற்கு முன்பு, தலைமுறை தலைமுறையாக, பல நூற்றாண்டுகளாக இரு நாடுகளுக்கு இடையே, வியாபாரமோ, போரோ நடந்தபோதும்கூட அவர்களது மீனவ சமுதாயங்கள் எந்தவித பாதிப்பிற்கும் உள்ளானதாகச் சரித்திரக் குறிப்புகள் இல்லை.

மீனவர் பிரச்சினைக்கு, கடல் எல்லை முடிவுசெய்யப்பட்ட பின்னரான கடந்த அறுபது ஆண்டுகால வரலாறே உள்ளது.

இன்னும் சொல்லப்போனால், இனப்போர் முடிந்த கடந்த பதினைந்து ஆண்டு வரலாறே உள்ளது. ஆனால், இரு நாட்டு மீனவர் சமுதாய ஒற்றுமைக்கும். பெண் எடுத்து, பெண் கொடுத்து வந்த பழக்கத்திற்கும், அது சார்ந்த கலாச்சாரத்திற்கும்...


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir




# இந்த ஆண்டு தனிச்சிறப்புப் பெறும்
# நல்லூர்க் கார்த்திகை







கார்த்திகேயன் என்பது முருகனின் உயர்ந்த திருநாமங்களில் ஒன்று. அவனை வட இந்தியர்கள் கார்த்திகேய சுவாமி, கார்த்திக் சுவாமி என்றே அழைக்கிறார்கள்.

அவனுக்கு கார்த்திகை நட்சத்திரம் மிகவும் சிறப்புடையது. இருபத்தேழு நட்சத்திரங்களில் ஒன்றான கார்த்திகை நட்சத்திரம் மாதம் ஒரு முறை வரும்.

எனவே மாதா மாதம் வரும் கார்த்திகை திருநாள் தோறும் முருகனை சிறப்புப் பூசித்து வழிபட்டால் வேண்டியன பெறலாம் என்பது கந்தபுராண செய்தி. இந்த கார்த்திகை விரதத்தை நோற்றே நாரத முனிவர் சப்த ரிஷிகளிலும் உயர் நிலை பெற்றார் என்பது முதலிய பல புராணச்செய்திகள் உண்டு. இவ்வாறு மாதம் தோறும் வரும் கார்த்திகை நட்சத்திரம் போல, மாதம் தோறும் வளர்பிறை, தேய்பிறை என்று இரு முறை வரும் சஷ்டி திதிகளும் சிறப்புடையன. அந்த சஷ்டி தோறும் விரதம் இருந்து முருகனை வழிபடும் வழக்கம் பலரிடம் உண்டு. ஆக, நட்சத்திர விரதங்களில் கார்த்திகையும் திதி விரதங்களில் சஷ்டியும் சிறப்புடையது.

அது போல, வாரத்தின் ஏழு நாட்களில் வெள்ளிக்கிழமை விரதம் புராணத்தில் குறிப்பிடப்பட்டாலும் முருகன் செவ்வாய் கிரகத்தின் அதிபதி என்பதால் செவ்வாய் தோறும் முருகனை வழிபடும் மரபு உண்டு.

அந்த வகையில் முருகனுக்கே உரிய கார்த்திகை நட்சத்திரம், சிறப்பு பெறும் சஷ்டித்திதி, மங்கள வாரமான செவ்வாய் என்ற மூன்றும் அபூர்வமாக ஒன்று சேரும் சிறப்பை இந்த ஆண்டு 05.09.2023 செவ்வாய்க்கிழமை காணலாம். இத்தகு நாள் நல்லூர் கார்த்திகையாக அமைவதும் கவனத்திற்குரியது.

கார்த்திகை நாளை கிருத்திகை என்று வடமொழியில் அழைப்பர். எனவே, தமிழகத்தில் பாமரர்களும் கிருத்திகை விரதம் என்றாலே புரிந்து கொள்வர்.

ஆகவே, மேலே சொன்னது போல மாதம் தோறும் கார்த்திகை வரினும் அவற்றில் கார்த்திகை மாத திருக்கார்த்திகை, ஆடிக் கிருத்திகை, தை கார்த்திகை தனிச்சிறப்புடையது. வைகாசி மாத கார்த்திகை மண்டல கிருத்திகை என்று வைத்தீஸ்வரன் கோயில் முத்துக்குமார சுவாமிக்கு சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

பங்குனி மாத கார்த்திகை சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முருகனருள் பெற்ற முத்துசுவாமி தீட்சிதர் அவதரித்த நாள்.

இவ்வகையில் நல்லூர் மஹோற்சவ கால கார்த்திகை நல்லூர் கார்த்திகை ஆகச் சிறப்புப் பெறுகிறது. நல்லூர் கோயிலில் புதிதாக அமைக்கப்பட்ட ராஜகோபுரங்கள், தங்க விமானம் யாவும் கும்பாபிஷேகம் செய்யப்பட்ட நாள் இதுவே ஆகும்.

தவிர, இந்நாளின் மாலை உற்சவத்தில் நல்லூர்ப்பெருமான் பூச்சப்பரத்தில் பழைமை மாறாத தீவட்டிகளின் ஒளியில் காட்சி தருவதும் மஹா சங்கீத ரசிகனாக இசை சமர்ப்பணத்தை கேட்டருள்வதும் தனித்துவமானதாகும்.

எனவே, இந்த அரிய திருநாளில் நல்லனவெல்லாம் தர வேண்டும் என உரிமையோடு நல்லூர் குமரனை இறைஞ்சுவோம். கார்த்திகைப் பாலன் கருணை எம் மீது படரட்டும்!!

கார்த்திகேயன் என்பது முருகனின் உயர்ந்த திருநாமங்களில் ஒன்று. அவனை வட இந்தியர்கள் கார்த்திகேய சுவாமி, கார்த்திக் சுவாமி என்றே அழைக்கிறார்கள்.

அவனுக்கு கார்த்திகை நட்சத்திரம் மிகவும் சிறப்புடையது. இருபத்தேழு நட்சத்திரங்களில் ஒன்றான கார்த்திகை நட்சத்திரம் மாதம் ஒரு முறை வரும்.

எனவே மாதா மாதம் வரும் கார்த்திகை திருநாள் தோறும் முருகனை சிறப்புப் பூசித்து வழிபட்டால் வேண்டியன பெறலாம் என்பது கந்தபுராண செய்தி. இந்த கார்த்திகை விரதத்தை நோற்றே நாரத முனிவர் சப்த ரிஷிகளிலும் உயர் நிலை பெற்றார் என்பது முதலிய பல புராணச்செய்திகள் உண்டு. இவ்வாறு மாதம் தோறும் வரும் கார்த்திகை நட்சத்திரம் போல, மாதம் தோறும் வளர்பிறை, தேய்பிறை என்று இரு முறை வரும் சஷ்டி திதிகளும் சிறப்புடையன. அந்த சஷ்டி தோறும் விரதம் இருந்து முருகனை வழிபடும் வழக்கம் பலரிடம் உண்டு. ஆக, நட்சத்திர விரதங்களில் கார்த்திகையும் திதி விரதங்களில் சஷ்டியும் சிறப்புடையது.

அது போல, வாரத்தின் ஏழு நாட்களில் வெள்ளிக்கிழமை விரதம் புராணத்தில் குறிப்பிடப்பட்டாலும் முருகன் செவ்வாய் கிரகத்தின் அதிபதி என்பதால் செவ்வாய் தோறும் முருகனை வழிபடும் மரபு உண்டு.

அந்த வகையில் முருகனுக்கே உரிய கார்த்திகை நட்சத்திரம், சிறப்பு பெறும் சஷ்டித்திதி, மங்கள வாரமான செவ்வாய் என்ற மூன்றும் அபூர்வமாக ஒன்று சேரும் சிறப்பை இந்த ஆண்டு 05.09.2023 செவ்வாய்க்கிழமை காணலாம். இத்தகு நாள் நல்லூர் கார்த்திகையாக அமைவதும் கவனத்திற்குரியது.

கார்த்திகை நாளை கிருத்திகை என்று வடமொழியில் அழைப்பர். எனவே, தமிழகத்தில் பாமரர்களும் கிருத்திகை விரதம் என்றாலே புரிந்து கொள்வர்.

ஆகவே, மேலே சொன்னது போல மாதம் தோறும் கார்த்திகை வரினும் அவற்றில் கார்த்திகை மாத திருக்கார்த்திகை, ஆடிக் கிருத்திகை, தை கார்த்திகை தனிச்சிறப்புடையது. வைகாசி மாத கார்த்திகை மண்டல கிருத்திகை என்று வைத்தீஸ்வரன் கோயில் முத்துக்குமார சுவாமிக்கு சிறப்பாக கொண்டாடப்படுகிறது.


பங்குனி மாத கார்த்திகை சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முருகனருள் பெற்ற முத்துசுவாமி தீட்சிதர் அவதரித்த நாள்.

இவ்வகையில் நல்லூர் மஹோற்சவ கால கார்த்திகை நல்லூர் கார்த்திகை ஆகச் சிறப்புப் பெறுகிறது. நல்லூர் கோயிலில் புதிதாக அமைக்கப்பட்ட ராஜகோபுரங்கள், தங்க விமானம் யாவும் கும்பாபிஷேகம் செய்யப்பட்ட நாள் இதுவே ஆகும்.

தவிர, இந்நாளின் மாலை உற்சவத்தில் நல்லூர்ப்பெருமான் பூச்சப்பரத்தில் பழைமை மாறாத தீவட்டிகளின் ஒளியில் காட்சி தருவதும் மஹா சங்கீத ரசிகனாக இசை சமர்ப்பணத்தை கேட்டருள்வதும் தனித்துவமானதாகும். எனவே, இந்த அரிய திருநாளில் நல்லனவெல்லாம் தர வேண்டும் என உரிமையோடு நல்லூர் குமரனை இறைஞ்சுவோம். கார்த்திகைப் பாலன் கருணை எம் மீது படரட்டும்!!

சிவஸ்ரீ. தி.மயூரகிரிக்குருக்கள்

# கல்வி





**’கற்க கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்கு தக’** என்னும் வாய்மொழியாம் திருக்குறளினது பொருளானது, நாம் எந்தவொரு நூலினையும் சந்தேகமின்றியும் அறியாமை இன்றியும் வாசித்து அதன் முழுப்பயனையும் எடுத்து எமது வாழ்வினில் அவற்றினை உள்ளடக்கி வாழ்வது சிறப்பானது என்பதாகும். இவ்வாறான பொருளுணர்த்தும் திருக்குறளிற்கு சிறந்ததோர் உதாரணமாக இக்குறள் இடம்பெறும் நூலான திருக்குறளினையே நாம் எடுத்துக்கொள்ளலாம். திருக்குறளானது பொய்யாமொழிப்புலவர் என அழைக்கப்படும் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. திருவள்ளுவர் திருக்குறளினில் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களினை உள்ளடக்கியதோடு அவற்றினை நூற்று முற்பத்து மூன்று அதிகாரங்களினுள் உள்ளடக்கியுள்ளார். திருக்குறளினிலிருந்து நாம் எமக்கும் எமது வாழ்க்கைக்கும் தேவையான வாழ்க்கைத் தத்துவங்களையும், வாழ்வியல் அம்சங்களையும் எடுத்துக்கொள்ளமுடியும். திருக்குறளினை அறத்துப்பால், பொருட்பால் மற்றும் காமத்துப்பால் என மூன்று பாற்களாக வள்ளுவர் வகுத்துள்ளார்.

இவ்வாறான பெருமைகள் பொருந்திய இவ் உலக மொழியாம் திருக்குறளினில் ’கல்வி’ என்னும் சொல்லும் தனியானதொரு அதிகாரத்தினை தன்வசம் வைத்துள்ளது. கல்விச்செல்வம், நாம் கல்வியினையும் ஒரு செல்வமாகவே அழைக்கின்றோம். பிற செல்வங்களை நாம் இலகுவில் இழந்துவிடக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகவே காணப்படுகின்றன. நெருப்பினால் வேகக்கூடியவை அவை, கள்வரினால் கொள்ளையடிக்கக் கூடியவை அவை, நீரினால் அழியக்கூடியவை அவை ஆனால் கல்விச் செல்வமோ அவ்வாறு அன்றி, கள்வரினால் கொள்ளையடிக்க முடியாதது, நெருப்பினால் வேகவைக்கமுடியாதது, நீரினால் அழிக்க முடியாதது, காற்றினால் அழித்துச்செல்ல முடியாதது. இவ்வாறான பற்பல சிறப்பம்சங்களினை உடைய இக் கல்வியானது எமது தமிழ் இலக்கிய மரபினிலும் சிறப்பானதோர் இடத்தினைப் பிடித்துள்ளது.

**‘மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையவன்
மன்னனிற்கு தன் தேசத்தில் மட்டும் தான் சிறப்பு
ஆனால் கற்றவனுக்கு செல்லும் இடமெல்லாம் சிறப்பு’**

எனும் ஔவையாரினது பாடல் வரிகளினிலும் கல்வியினது சிறப்பானது தெளிவாகப் புலப்படுகின்றது. ஒரு நாட்டினது தலைசிறந்தவனும் மேன்மை பொருந்தியவனுமான மன்னனிற்கும், நன்றாக கல்வியினில் சிறந்து விளங்கக்கூடிய ஒரு கற்றவனுக்கும் இடையிலான வேறுபாடுகள் இங்கு தெளிவாகப் புலப்படுகின்றது, மன்னனானவன் கற்றவனை விட சிறப்பான ஒருவனாகவும், மேன்மையான ஒருவனாகவும் விளங்கினாலும் அவனுக்கு அவனது ஆட்சிக்குரிய தேசத்தில் மட்டும் தான் மதிப்பு ஆனால் அவனைவிட மேன்மையற்றவனாக விளங்கி கல்வியில் சிறந்தோங்கிய ஒருவனுக்கு அவனது தேசத்தில் மட்டும் அன்றி அவன் செல்லும் அனைத்து தேசத்திலும் மதிப்பு உண்டு ஆகையினாலே தான் மன்னனை விட மாசறக் கற்றோன் சிறப்புடையவனாக விளங்குகின்றான். இங்கும் கல்வி கற்பதனில் இருக்கும் முக்கியத்துவமானது சிறந்து விளங்குகிறது.

நாம் நமக்கான கல்வியினை சிறுவயதினிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் அவ்வாறான கூற்றின் பிரகாரமும் ஓர் பழமொழி இலக்கிய வழியில் இவ் உலகிற்கு வந்துள்ளது.

**‘இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.’**

இது பழமொழிகளினுள் உள்ளான கல்வியினது தாக்கம்பற்றி பெரிதும் எடுத்துக்கூறுகின்றது. இவ்வாறான பழைய இலக்கிய படைப்புகளில் மட்டுமன்றி தற்கால இலக்கிய படைப்புகளினிலும் கல்வியின் சிறப்புகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**‘கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே’**

இக்கூற்றானது தற்கால இலக்கியப் படைப்புக்களில் ஒன்றினில் விளங்கிய ஒரு கூற்றாகும். இதில் கல்வியின் மேன்மையானது சிறந்தோம்புகின்றது. பிச்சை கொடுப்பதனைவிட கல்வி கற்றபதானது சிறப்பானது என்பதனையே இது வலியுறுத்துகின்றது.

இவ்வாறான இலக்கிய படைப்புகளில் கல்வியின் தாக்கம் சிறப்பாக எடுத்துரைக்கப்படுவதோடு, திருக்குறளினிலும்; எடுத்துக்காட்டப்படுகின்றது. திருக்குறளினில் கல்வி எனும் அதிகாரமானது நாற்பதாவது அதிகாரமாக விளங்குகின்றது. இது பொருட்பாலினுள் உள்ளடங்குகின்றது. குறட்பாக்களின் முந்நூற்று தொண்ணூற்று ஓராவது குறளான

**’கற்க கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்கு தக’**

ஆனது, பலராலும் கல்வியினது மேன்மை பற்றி பேச உதவுகின்ற ஒரு குறளாகும். கல்வியினை எவ்வாறு கற்க வேண்டும். அதனை கற்றதன் மூலம் என்ன செய்ய வேண்டும் ஆகிய குறிப்புக்களை நாம் இக்குறளிலிருந்து பரிந்துரை செய்ய முடியும்.

**‘கண்ணுடையர் என்பவர் கற்றோர்
முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதார்’**

எனும் குறளும் கற்றோரினது பண்புகளை எடுத்துரைக்கின்றது. கற்றவரினை இங்கு கண்ணுடையோருக்கு ஒப்பிடுகின்றதோடு கல்லாதோர் புண்ணுடையோருக்கு ஒப்பிடப்படுகின்றனர். கல்வியினைக் கற்பது நமது வாழ்விற்கு ஒரு விழியினை திறந்து வைப்பது போன்றது ஆகையாலே கற்றோர் கண்ணுடையோராக ஒப்பிடப்படுகின்றனர். கல்வியினைக் கற்காமல் நீக்குவது எமது வாழ்வினை தீமைக்கு விட்டுச் செல்லக் கூடியது ஆகையினாலே கல்லாதோர் புண்ணுடையோர்க்கு ஒப்பிடப்படுகின்றனர். மகாத்மா காந்தியும் தொழிற்கல்வியின் சிறப்புகள் பற்றி உலகிற்கு எடுத்துக்கூறியுள்ளார்.

சி.அடம்கபிரியோ
யா/சென் பத்றிக்ஸ் மகா வித்தியாலயம்.

காலைக்கதிர்
Kalaikkathir

# ஐ.நா. நிரந்தர வதிவிடப் பிரதிநிதி எதிர்க்கட்சித் தலைவருடன் சந்திப்பு



ஐ.நாவின் புதிய நிரந்தர வதிவிடப்பிரதிநிதி மார்க் ஆண்ரோ பிராஞ்சை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சந்தித்து கலந்துரையாடினார்.

ஐக்கியநாடுகள்சபையின் புதிய நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ் மற்றும்எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலானசந்திப்பொன்று புதன்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஐக்கியநாடுகள்சபையின் புதிய நிரந்தர வதிவிடப் பிரதிநிதி நாட்டில் தனது பணியை ஏற்றுக்கொண்டதன்நிமித்தமே இந்தச்சந்திப்பு இடம்பெற்றது.

நாட்டின் பல்வேறு சமூக பொருளாதார அரசியல் விடயங்கள் தொடர்பாக இரு தரப்புக்கும் இடையில் இதன்போது பலகருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

நாட்டில் நிலவிவரும் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐ.நாவின் புதிய நிரந்தர வதிவிடப் பிரதிநிதிக்கு தெரியப்படுத்தினார்.

தற்போதையஅரசாங்கம் மக்களின்ஜனநாயகஉரிமைகளை மீறி தேர்தல்களை ஒத்திவைத்து அடிப்படை உரிமைகளை மீறி வருவது தொடர்பாகவும்அவர்மேலும் தெரியப்படுத்தினார்.

இந்த நிகழ்வில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (05)

# சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த முறைப்பாடுகள் அதிகரிப்பாம்

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக இந்த வருடம் 5,000 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என தேசிய சிறுவர் காப்புறுதி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 5,456 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என தேசிய சிறுவர் காப்புறுதி அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதய குமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

அவற்றில், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 1,296 முறைப்பாடுகளும், கடுமையான காயங்கள் தொடர்பாக 163 முறைப்பாடுகளும், கடுமையான பாலியல் துஷ்பிரயோ கம் தொடர்பான 242 முறைப்பாடுகளும்பெறப்பட்டுள்ளன.

மேலும், சிறுவர்கள் பிச்சை எடுப்பது தொடர்பாக இதுவரை 196 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் இதுதொடர்பான முறைப்பாடுகள்பெரும்பாலும் கொழும்பு மற்றும் நகர்ப்புறங்களில் இருந்து பதிவாகியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சமூக ஊடகங்களைப்பயன்படுத்துதல் மற்றும்இணையவெளியில் சிறுவர்களைதுஷ்பிரயோகம் செய்தல் தொடர்பாக 110 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறுமிகள் தொடர்பில் 76 முறைப்பாடுகளும், சிறுவர்கள் தொடர்பில் 31 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் இவ்வாறான முறைப்பாடுகள்தொடர்பான தகவல்கள் பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனஎனவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது. (05)





# 10 மாதங்களுக்கு முன்னர் காலாவதியான திரிபோஷா விநியோகம் எனக் குற்றச்சாட்டு

10மாதங்களுக்குமுன்னர்காலாவதியான திரிபோஷா கையிருப்பு தமக்கு விநியோகிக்கப்பட்டதாக திரிபோசாவை பெற்றுக்கொண்ட தாய்மார்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த சம்பவம் கெஸ்பேவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு சொந்தமானகஹ்பொலரெகிதெலவ்வத்த தாய் மற்றும் சிறுவர் சிகிச்சை மையத்தில் பதிவாகியுள்ளது.

இந்நிலையில் குறித்த திரிபோஷாக்களை வியாழக்கிழமை கொண்டுவந்து மாற்றிக்கொள்ளுமாறு குடும்ப சுகாதார சேவை அதிகாரி தெரிவித்துள்ளார்.

3 வயதுக்கும் 5 வயதுக்கும் இடைப்பட்ட எடை குறைந்த குழந்தைகளுக்கு திரிபோஷா வழங்க சுகாதார அமைச்சால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதற்காக தகுதியுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் இரண்டு திரிபோஷா பொதிகள் வழங்கப்படும் எனவும் தாய்மார்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், இது தவறு என அதன் பேச்சாளர் குறிப்பிட்டார். (05)

# மாணிக்கக்கற்களை கடத்த முற்பட்ட பெண் விமான நிலையத்தில் கைது

*சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கற்களை வெளிநாட்டுக்கு கடத்த முற்பட்ட பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இலங்கையைச் சேர்ந்த வர்த்தகப்பெண்ஒருவரேஇவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.*

*30 வயதுடைய குறித்த பெண் ஒருகொடவத்தை பிரதேசத்தை சேர்ந்தவர் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.*

*கட்டுநாயக்கவிலிருந்து இந்தியாவின் சென்னை நோக்கி இவர் பயணிக்க முற்பட்ட போதே கைது செய்யப்பட்டுள்ளார்.*

*அவரது ஆடைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மாணிக்கக்கற்களின் எடை 2 கிலோ 311 கிராம் எனத் தெரியவந்துள்ளது.*

*இவ்வாறு கைப்பற்றப்பட்ட மாணிக்கக்கற்களின் சந்தை பெறுமதி 29.1 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.*

*விமான நிலைய சுங்க அதிகாரிகளின்மேலதிகவிசாரணைகளின் பின்னர் கைதுசெய்யப்பட்ட பெண் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)*



# கண்டி தலதா எசல பெரஹராவின் இறுதி ரந்தோலி பெரஹரா நிறைவு

வரலாற்று சிறப்புமிக்க கண்டிஸ்ரீதலதாமாளிகையின் எசல பெரஹராவின் இறுதி ரந்தோலி பெரஹராவைக் காணபுதன்கிழமைஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் கலந்து கொண்டார்.

பேராசிரியர் மைத்ரி விக்ரமசிங்க, அமைச்சர்களான விஜயதா ராஜபக்ஷ, சுசில் பிரேமஜயந்த், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும்இலங்கைக்குவிஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க செனட் சபை உறுப்பினர் கிறிஸ் வென் ஹொலன், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோரும்ஜனாதிபதியுடன் இணைந்து பெரஹராவைக் கண்டுகளித்தனர்.

புதன் இரவு 7.03 எனும் சுப நேரத்தில் ஸ்ரீதலதா மாளிகையின்முன்பாகவடக்கு திசையைநோக்கிப்பயணித்த எசல பெரஹரா, தலதா வீதி, யட்டிநுவர வீதி, கந்த வீதி, டி.எஸ். சேனாநாயக்க வீதி ஊடாக பயணித்து ரஜ வீதியூடாகச் சென்றது.

வரலாற்று சிறப்புமிக்க எசல பெரஹராவின் இறுதி ரந்தோலி பெரஹராவைக் காண, பாதையின்இருபுறமும் பெருமளவில் மக்கள் திரண்டிருந்தனர்.

அதேநேரம், கண்டிக்கு விஜயம்செய்திருந்தஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க, மல்வத்து மற்றும்அஸ்கிரியபீடங்களின் அனுநாயக்க தேரர்களை சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார். (05)

# பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதியுடன் அருட்தந்தை சந்துரு பெர்னாண்டோ சந்திப்பு









பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி கர்தினால் பிறைன் உடக்குவேவுக்கும் சர்வதேச இசை கல்லூரிக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கை தூதுவரான அருட்கலாநிதி சந்துரு பெர்ணாண்டோவுக்கும் இடையிலான சந்திப்பொன்று கொழும்பில் இடம்பெற்றது.

மரியாதை நிமித்தமாக சர்வதேச இசைகல்லூரிக்கானபயிற்சிநிலையத்தின் இலங்கைதூதுவரானஅருட்கலாநிதிசந்துரு பெனாண்டோவை கொழும்பில் சந்தித்து உரையாடியபாப்பரசரின்இலங்கைக்கான பிரதிநிதி கர்தினால் பிறைன் உடக்குவே ஆண்டகை, பல்வேறு விடயங்கள் தொடர்பாகஇவருடன்கலந்துரையாடினார்.

கடந்த வருடத்தை விட இந்த வருடம் நாடு சில முன்னேற்றங்களை காண்பதாகவும், அனைவரும் ஒரு சமூகமாய் தொடர்ந்து இந்த நாட்டுக்காக பிரார்த்தனை செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மேலும், கடந்த மாதங்களில் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு சென்றதாகத் தெரிவித்த பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி கர்தினால் பிறைன் உடக்குவே ஆண்டகை, கடந்த 30 வருட கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களை நேரில் அவதானித்தாகத் தெரிவித்தார். இதன்போதுகருத்துவெளியிட்ட அருட்கலாநிதி சந்துரு பொ்னாண்டோ, நாட்டை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்ல சர்வதேசத்தின் ஆதரவு தேவை என்றும்அனைவரும்ஒற்றுமையாய்இந்த நாட்டைபிரச்சினைகளிலிருந்துமீட்டெடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (05)

# ஐ.நா. விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்குக!

## சந்தியா எக்னெலிகொட வலியுறுத்து

இலங்கையில்காணாமல் போனோர்தொடர்பாக 2022 இல் ஜ.நாவில் நியமிக்கப்பட்ட விசாரணைக்கான குழுவின் விசாவுக்கான அனுமதியை வரத்தமானி மூலம் தடைசெய்தமை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரதீப் எக்னெலிகொடவின்துணைவியார் சந்தியா எக்னெலிகொட கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பில் சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தினத்தையிட்டு முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

காணாமல்போனவர்கள் வெளிநாட்டில் இருப்பதாக ஜனாதிபதி தெரிவிக்கும் நகைச்சுவையை நிறுத்தும் வரையில் இந்த நாட்டில் என்றுமே நீதியை பெற்றுக் கொள்ள முடியாது.

இந்தநாட்டில்காணாமல் போனவர்கள் என்று ஒன்று இல்லை எனவும் அவர்கள் வெளிநாடுகளில் இருக்கின்றனர் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

எனவே நீங்கள் ஜனாதிபதி தானே அவர்களை வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு கொண்டுவரமுடியும் தானே எனவே இவ்வாறான நகைச்சுவையை நிறுத்துங்கள்.

வடக்கு கிழக்கில் பலாத்தகாரமாக காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்கள் கண்ணீரில் மூச்சுவிட்ட பூமி ஆகும்.

ஏன் என்றால் கொழும்பு கொஸ்வத்தை பிரதேசத்தில் பலவந்தமாக எனது கணவரான ஊடகவியலாளர் பிரதீப் எக்கினா கொட கடத்தி செல்லப்பட்டார்.

அவர் அங்கு எரிக்கப்பட்டாரா அல்லது எங்காவது புதைக்கப்பட்டாரா? அல்லது கடலில் கொண்டு சென்று போட்டார்களா? தெரியவில்லை இருந்தபோதும் இந்த சர்வதேச காணாமல் ஆக்கப்பட்ட தினத்தில் பல காரணங்கள் தெரிவிக்க வேண்டியுள்ளது.

ஓ.எம்.பி காரியாலயம் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக அதிகளவான பணத்தை வீண் செலவு செய்து நடத்தி வருகின்றது.

இந்த ஓ.எம்.பி. கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களை உண்மையாக நீதியாக தேடி கொடுத்துள்ளதா?

குறைந்தது உண்மையையாவது அமைப்புகளுக்கு முன்வைத்தா? இல்லை.

இந்த தாய்மாருக்கு தேவையானது உண்மையும் நீதியும் அது இந்த நாட்டில் நடைபெறாது என்பதால்தான் சர்வதேச அமைப்புக்களிடம் செல்லவேண்டியுள்ளது.

2022 ஜ.நாவில் இலங்கையில் காணாமல் போனோர் தொடர்பான விசாரணைக்கான குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

இந்த விசாரணைக்குழு இறுதிவரை இலங்கைக்கு வரவில்லை. அவர்களுக்கான விசா அனுமதியை வர்த்தமானி மூலம் தடைசெய்து அதனை ஜனாதிபதியின் வீட்டு காப்பற்றின் கீழ் போடப்பட்டுள்ளது.

எனவே சட்டத்தின் கீழ் அவர்கள் இலங்கைக்கு வர அனுமதிக்கவும் அதற்கான நீதியை வேண்டி போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவை ஏற்படும் என அரசாங்கத்துக்கு தெரிவிக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# தனியார் கல்வி நிலையங்களை ஒழுங்குபடுத்த நடவடிக்கை

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவிப்பு

கிழக்கு மாகாணத்தில் தனியார் கல்வி நிலையங்களை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

அரசியலுக்குவருவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் நீண்ட கலந்துரையாடல், கருத்துக்கணிப்பு மற்றும் முறைப்பாடுகளை பரிசீலித்து இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

தனியார் கல்வி நிறுவனங்கள் வர்த்தக சான்றிதழ்களைப் பெற வேண்டும், ஞாயிற்றுக்கிழமைகளில் வகுப்புகளை நடத்தக்கூடாது, மற்ற நாள்களில் மாலை 6 மணிக்கு முன் நடத்த வேண்டும்.

மேலும் ஒரு மணி நேர வகுப்பின் அதிகபட்ச கட்டணம் உயர்தர மாணவருக்கு 70 ரூபாவாகவும் மற்ற மாணவர்களுக்கு 50 ரூபாவாகவும் இருக்க வேண்டும்.

பெற்றோர் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும், நேர அட்டவணை, வருகை குறிக்கப்படல், ஆசிரியர்களின் பெயர் காட்ட வேண்டும் மற்றும் குடிநீர், சுகாதார வசதிகள் மற்றும் பாதுகாப்பை வழங்க வேண்டும்.

பயிற்சியில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாக அலுவலர்கள் பற்றிய தகவல்கள் வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

இதேநேரம் விடுமுறையில் உள்ள ஆசிரியர்கள் பாடசாலை நேரங்களில் வகுப்புகள் அல்லது கருத்தரங்குகளை நடத்தக்கூடாது. (05)

# அஷ்ரப் நினைவுதினத்துக்கு அனைவருக்கும் அழைப்பு



தனது கொள்கைகளை விதையாக வீழ்த்தி முஸ்லிம் அரசியலில் புதிய முகவரி எழுதி தனது அரசியலில் தனித்தன்மையை உறுதிப்படுத்திய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபக தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஜனாதிபதி சட்டத்தரணி பெருந்தலைவர் கலாநிதி எம்.எச்.எம். அஸ்ரப் நினைவு தினமும் துஆ பிராத்தனையும் அடங்கிய தேசிய நிகழ்வு எதிர்வரும் 16 ஆம் திகதி அவரின் தொகுதியான கல்முனை தொகுதியின் சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச். எம். எம். ஹரீஸ் அறிவித்துள்ளார்.

தனது அறிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு-

இந்நிகழ்வை உயிரோட்டமுள்ளதாக மாற்றியமைக்க தலைவர் அஷ்ரபை நேசிக்கும் உறவுகள் எல்லோரும் பிரதேசங்கள் கடந்து, மாறுபட்ட கட்சி கொள்கைகள் துறந்து ஒன்றிணைவோம். முஸ்லிம் அரசியலின் தந்தையாக நோக்கப்படும் அவரின் கொள்கைகள் காலத்தால் அழியாதவை. உள்நாட்டு இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்கான தீர்வாகட்டும், அபிவிருத்தி விடயங்களாக இருக்கட்டும், நாட்டின் இறையாண்மையாகட்டும், தேசிய பாதுகாப்பாகட்டும், சர்வதேச ராஜதந்திர உறவுகளாகட்டும், வறுமை ஒழிப்பு, சமூக நீதி என்ற பல்வேறு விடயங்களிலும் தனித்தன்மை கொண்ட அந்த தலைவன் முன்வைத்தவிடயங்களைநாம்கண்களூடாக பார்த்தவர்கள் ஏராளம். அவரை போன்ற கொள்கைகளை வகுக்கவும், நீண்டகால திட்டங்களை முன்மொழியவும் இதுவரை முடியவில்லை. அவ்வாறான வெற்றிகரமானதிட்டங்களை அவர் முன்வைத்துள்ளார்.

இப்போதைய இளைஞர்கள் மத்தியில் இந்த பெருந்தலைவரின் கொள்கைகளை எடுத்துரைக்கும் இந்நிகழ்வில் இளைஞர்கள் அணிதிரண்டு வந்து கொள்கைகளை விதையாக வீழ்த்தி முஸ்லிம் அரசியலில் புதிய முகவரி எழுதிய தலைவரின் வாழ்வை அசைபோட ஒன்றிணைவோம். தனது அரசியலில் தனித்தன்மையை உறுதிப்படுத்திய பெருந்தலைவர் கலாநிதி எம்.எச்.எம். அஸ்ரப்பின் நினைவு தினமும் துஆ பிராத்தனையும் அடங்கிய 'தலைவர் நினைவு தினம்' தேசிய நிகழ்வில் கட்சிகொள்கைகளைமறந்துதலைவர்அஸ்ரப் எனும்ஆளுமையைகற்கஒன்றிணைவோம் என கேட்டுக்கொண்டுள்ளார். (05)



# 4 ஆவது வருட பூர்த்தியும் கிரிக்கெட் கண்காட்சியும்

சாய்ந்தமருது பிரதேசத்தில் இளம் முன்னணி வீரர்களை உள்ளடங்கிய சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் நண்பர்கள் வட்ட அமைப்பினுடைய 4 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு அமைப்பின் புதிய சீருடை அறிமுகமும் சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பைட்டஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சாய்ந்தமருது ஸஹ்ரியன் விளையாட்டுக் கழகம் மோதிய சிநேகபூர்வ கிரிக்கெட் கண்காட்சி போட்டியும் சாய்ந்தமருது பொது மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஈஸ்ட்டர்ன் பைட்டர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. 20 ஓவர்களில் 8 விக்கட்டினை பறிகொடுத்து 199 என்ற இலக்கை எதிர் அணியினருக்கு நிர்ணயித்து இருந்தனர். இதில் என்.எம். ஸஜீர் 39 ஓட்டங்களை 30 பந்துகளிலும் சஹீப் 33 ஓட்டங்களை 29 பந்துகளிலும் பெற்றுக் கொண்டனர் அதனை அடுத்து துடுப்பெடுத் தாடிய ஸஹ்ரியன் அணி 18.4 ஓவர்களில் 147 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து தோல்வியைத் தழுவ இப்போட்டியின் கிண்ணத்தை ஈஸ்ட்டர்ன் பைட்டர்ஸ் அணியினர் தன் வசம் ஆக்கிக் கொண்டனர். (05)







# முதல் சேவையின் போதே சினோபெக் எரிபொருளுக்கு 3 ரூபா விலைக் கழிவு

பெற்றோல் மற்றும் டீசலுக்கு லீற்றருக்கு 3 ரூபா விலைக் கழிவுடன் சினோபெக் லங்கா நிறுவனம் உத்தியோகபூர்வ வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

அதன்படி மத்தேகொடவில் உள்ள முதல் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் விநியோகத்தை சினோபெக் லங்கா நிறுவனம் தொடங்கியது. (05)

# கடலில் வெடிப்பு; 25 ஆமை சாவு

கடந்த ஓகஸ்ட் 22 ஆம் திகதி முதல் மேல் மாகாண கடற்கரையோரம்கரை ஒதுங்கிய ஆமைகள் கடலில் ஏற்பட்ட வெடிப்புகாரணமாக உயிரிழந்தன என வன விலங்கு பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது. 25 ஆமைகள் உயிரிழந்தமைக்கான காரணம் குறித்து உடனடியாக நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார்.

தடைசெய்யப்பட்ட மீன் பிடி முறைகளுக்கு வெடி மருந்துகளை பயன்படுத்தியதன் காரணமாக கடலில் வெடிப்புகள் ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை மூன்று ஆமைகளின் வெளிப் புற ஓடு பலத்தசேதமடைந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# வீரமாகாளி அம்மன் ஆலயத்தின் உண்டியல் உடைத்துத் திருட்டு

*யாழ்ப்பாண நல்லூர் வீரமாகாளி ஆலயத்தின் உண்டியல் உடைக்கப்பட்டு பணம் களவாடப்பட்டுள்ளது.*

*அத்தோடு வசந்த மண்டபத்தில் இருந்த ஒரு தொகைப் பணமும் களவாடப்பட்டுள்ளது.*

*குறித்த திருட்டுச் சம்பவத்துடன் ஆலயத்தில் நெருங்கிச் செயற்பட்டவர் சம்பந்தப்பட்டமை சிசிடிவி காட்சிகள் மூலம் உறுதியாகிய நிலையில் ஆலய குருக்கள் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். (05)*

# முன்னாள் மேல்மாகாண சபை உறுப்பினர் மர்ஹூம் பாயிஸ் நினைவேந்தல் நிகழ்வு

அகிலஇலங்கைமக்கள்காங்கிரஸின் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினரும், கொழும்பு மாவட்ட அமைப்பாளருமான மர்ஹூம் பாயிஸின் நினைவாக, துஆ பிரார்த்தனையும் நினைவேந்தல் நிகழ்வும் புதன்கிழமை கொழும்பு, சேர் ராசிக் பரீத் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

பாடசாலை சமூகத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமானரிஷாத்பதியுதீன், முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அர்ஷாட் நிசாம்டீன் மற்றும் சட்டத்தரணி ருஷ்தி ஹபீப் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டனர். (05)

# அஸ்வெசும வேலைத்திட்டம் தெளிவூட்டல் செயலமர்வுகள்





சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் எதிர்கால திட்டங்கள், அஸ்வெசும வேலைத்திட்டம் தொடர்பில் திணைக்கள உத்தியோகத்தர்கள், சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்க கட்டுப்பாட்டுச் சபை, நிறைவேற்றுக் குழு தலைவர்களுக்கான தெளிவூட்டல் செயலமர்வு கடந்த புதன்கிழமை அம்பாறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்ராஸ் தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் திருமதி பாக்கியராஜா, குறுநிதிப் பணிப்பாளர் மன்னார் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் ஐ.அலியார் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதில் அம்பாறை மாவட்டத்திலுள்ள சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், சமுர்த்தி வங்கி சங்க முகாமைத்துவப் பணிப்பாளர்கள், சமுர்த்தி வலய உதவியாளர்கள், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர்கள், சமுர்த்தி வங்கி, வங்கிச் சங்க கட்டுப்பாட்டுச் சபை, நிறைவேற்றுக் குழு தலைவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

**பசுமைப்....**

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

பழைய முறையின் கீழ் சென்றால், ஒரே இடத்தில் சுற்றுவதற்குக்கூடநாடொன்று எஞ்சாது. ஏனென்றால்இன்று நாம் இருக்கும் இடத்தில் ஒரு பெரும் இடைவெளி இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

இந்த நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்கக் காத்திருக்கும்தலைமுறைக்கு இவ்வாறானதொரு நிலை ஏற்பட இடமளிக்க மாட்டோம் என்பதையும்கூறவேண்டும். எனவேதொழில்நுட்பத்துடன் புதிய பயணத்தை மேற்கொள்ள வேண்டும். 21ஆம் நூற்றாண்டின்தொழில்நுட்ப வளர்ச்சியை பற்றி நான் சொல்லத் தேவையில்லை.

நாங்கள்பாடசாலையில் கற்கும்போது கிராமங்களில் ஒரு தொலைபேசிகூட இருக்கவில்லை. ஆனால் இன்று அனைவரிடமும் அலைபேசி உள்ளது. சிலரிடம் இரண்டு இருக்கின்றன. அதுதான் நிகழ்ந்துள்ள மாற்றமாகும்.

இந்த மாற்றத்துடன் நாம் முன்னேறும்போது, நவீன தொழில்நுட்பத்தை நாட்டுக்கு கொண்டு வர வேண்டும். அதற்காகப் பல பெரும் பணிகளைச் செய்து வருகிறோம்.

மேலும், கல்வி அமைச்சு மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் அந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அதன்படி, நாட்டுக்கு அறிமுகப் படுத்தப்படும் புதிய தொழில்நுட்ப முறைகளை முடிவு செய்யவேண்டும். பிளாக்செயின் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, ஜெனொம் விஞ்ஞானம் என இவை அனைத்தையும் நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

இந்தத் தொழில்நுட்பங்களைக் கிராமங்களுக்குக் கொண்டுசெல்லவேண்டும். ஏனென்றால், புதிய தொழில்நுட்பத்தை வீட்டுக்கு எடுத்துச் செல்லும் வகையில் விவசாயத்தை நவீனமயமாக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி வருகிறோம். நவீன தொழில்நுட்பத்துடன் நாம் முன்னேறும்போது இன்னொரு விடயத்தையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். தொழில்நுட்பம் மட்டும் போதுமானதல்ல.

இந்தஅனைத்துநடவடிக்கைகளுக்கும் பணம் தேவைப்படுகிறது. நாம் அனைத்துவிடயங்களுக்கும் பணத்தை பயன்படுத்தும் சமூகம். இன்றுஅந்தப்பணம் மிகவும் திறந்த சந்தையில் பயன்படுத்தப்படுகிறது. பணப் பயன்பாட்டை அரசினால் கட்டுப்படுத்த முடியாது. அமெரிக்க அரசோ அல்லது சர்வதேசநாணய நிதியமோ அதைச் செய்ய முடியாது.

அன்றுடிஜிட்டல்தொழில்நுட்பம் இருக்கவில்லை. இலங்கைக்கு இணையத்தைப்பெற1993ஆம்ஆண்டில் நான் கையெழுத்திட்டேன். அதுவரை இந்த வசதிகள் எங்களிடம் இல்லை. இந்த புதிய தொழில்நுட்பத்தின் மூலம் நாம் மிகக் குறுகிய காலத்தில் உலகத்துடன் இணைந்துள்ளோம்.

போட்டித்தன்மையான பொருளாதாரத்தில், எல்லைகளைப் பற்றிக் கவலைப்படாதநிதிமுறைமையே உள்ளது. இது நல்லதோ கெட்டதோ அதை மாற்ற முடியாது. இந்த எல்லையில் இருந்து நாம் செயற்பட வேண்டும். உலகிற்குத் தேவையான பணம் இறுதியாக சந்தையில் இருந்து பெறப்படுகிறது.

வங்கிகள் தங்களுக்குத் தேவையான பணத்தை வங்கிகளிடமிருந்து பெறுகின்றன. நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான பணத்தைபங்குச்சந்தையில் இருந்து பெறுகின்றன. அதற்கேற்ப பணம் பயன்படுத்தப்படுகிறது.

இங்கேமிகமுக்கியமான விடயம் பணம். தனியார் துறையைப்போலவே, அரசும் பணச் சந்தையைத்தான் தேர்ந்தெடுக்கிறது. திறைசேரி முறிகளைப் பெறுகிறோம். இன்று இந்த முறையைப் பற்றி உங்களை அறிவூட்ட அதன் ஒரு பகுதியைத்தான் தொடங்கியுள்ளோம்.

அதேபோல் அடுத்த வருடத்திலிருந்து மத்திய வங்கி அறிக்கைகளை பாடசாலைகளில் ஆராய்வதற்குஎதிர்பார்க்கிறேன். அது தொடர்பில் நிதி அமைச்சுடன் பேச்சு நடத்துகிறோம். அதற்காக ஆசிரியர்கள் மற்றும் மாணவத் தலைவர்களை பயிற்றுவிப்பதோடு, வங்கி அதிகாரிகளின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்ளவும் எதிர்பார்க்கிறோம்.

புதிய முறைமைகள் தொடர்பில் நாம் அறிந்திருக்க வேண்டும். அறிவை பெற்றுக்கொடுப்பதற்கு மாத்திரமன்றிநிதிப்பயன்பாடு, பிணையங்கள் உள்ளிட்ட அனைத்தையும் கிராமங்கள் வரையில் கொண்டுச்செல்ல வேண்டும். கிராமங்களில் திறமையானவர்கள் உள்ளனர். அவர்களுக்கு அவசியமான அறிவை பெற்றுக் கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

இன்று முழு உலகமும் ஒரே சந்தையாக இயங்குகிறது. அதனுடன் நாமும் இணைந்துகொள்ள வேண்டும். அதற்காக பல சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களையும் கைசாத்திட வேண்டும். சிங்கப்பூர், இந்தியா, பங்களாதேஷ், தாய்லாந்து, இந்தோனேசியா, சீனா, மலேசியா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகளுடன் நாம் பேச்சு நடத்திவருகிறோம். ஜப்பான், கிழக்காசியா, தென்கிழக்காசியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து உள்ளிட்ட நாடுகளுடன் புதிய சந்தைக்குள் பிரவேசிக்க எதிர்பார்த்துள்ளோம்.

அதேபோல் அவசியமான வசதிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் நாம் ஐரோப்பியசங்கத்துடன்பேச்சு நடத்தியுள்ளோம். இன்னும் இருவாரங்களில்அமெரிக்கக் குழுவொன்று எம்முடன் பேச்சுக்காக இலங்கை வரவுள்ளது. அதனால் உலக சந்தை மற்றும் அதற்கான ஒப்பந்தங்கள் தொடர்பில் நாம்அறிந்திருக்கவேண்டும்.

நாம் புதிய பசுமைப் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப போகிறோம். அதேபோல் டிஜிட்டல் பொருளாதாரத்தையும் கட்டமைப்போம். பசுமைப் பொருளாதாரத்திலும் பங்குப் பரிவர்த்தனை இருக்கும். அதற்குள் புதிய முறைமைகள் காணப்படும். அதேபோல் கடல் வழிப் பொருளாதாரம் ஒன்றை உருவாக்கவும் எதிர்பார்த்துள்ளோம்.

அது தொடர்பில் லண்டனிலுள்ள விசேட சட்டத்தரணிகள் சங்கத்தினருடன் கலந்துரையாடிசட்டங்களை உருவாக்கி வருகிறோம். நாம் புதிய பொருளாதார முறையுடன் முன்னோக்கிச் செல்ல வேண்டுமா முடங்கிக் கிடக்க வேண்டுமா என்பதை தீர்மானிக்க வேண்டும்.

இன்னும் 10-15 வருடங்களாகின்றபோது, இங்குள்ள பலரும் 25-35 வயதை அடைந்திருப்பீர்கள். அதனால் உங்களுடைய எதிர்காலம் தொடர்பில் இன்றிலிருந்தே தீர்மானிக்க வேண்டும். அதற்கு அவசியமான அறிவை நாம் பெற்றுத்தருவோம். அதற்கான வேலைத்திட்டத்தினையே இப்போது தொடங்கியிருக்கிறோம்.

தற்போது 100 பாடசாலைகள் மாத்திரமே இந்த வேலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அந்த எண்ணிக்கையில் அதிகரிக்கப்படும். பங்குச்சந்தை, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவிற்கு இயலுமை இருக்குமாயின் இந்த செயற்பாடுகளுடன்தொடர்ந்து கைகோர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒன்று அல்லதுஇரண்டுசங்கங்களை பொறுப்பேற்றுக்கொண்டு அவர்களுக்கு உதவிகளை வழங்குங்கள்.

இந்த வேலைத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்காக 10 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒரு இலட்சம் என்ற அடிப்படையில்கிடைக்கும். அதனை தவிர்ந்த எந்தவொரு தொகையினையும்இந்ததிட்டத்திற்காக செலவிட வேண்டாம். இதனை ஒரு இலட்சத்திற்குள் மட்டுப்படுத்துங்கள். வருட இறுதியில் எந்த பாடசாலை சிறப்பாக செயற்பட்டுள்ளது என்பதை தேடியறிவோம்.

வேலைத் திட்டத்தினை சரியான முறையில் நிறைவு செய்யும் பாடசாலையின் 10 மாணவர்களுக்கும் விடயம் சார்ந்த ஆசிரியருக்கும் சிங்கப்பூர்பங்குச்சந்தையின் நடவடிக்கைகள் தொடர்பில் அறிந்துகொள்வதற்கான சுற்றுப்பயணத்திற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படவுள்ளது.

அதனாலேயே அந்தத் தொகையைஒருஇலட்சத்திற்கு மட்டுப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டது. வறுமையான பகுதியாக இருந்தாலும் வளர்ச்சியடைந்த பகுதியாக இருந்தாலும் செலவு ஒரு இலட்சம் ரூபாவாக மட்டுப்படுத்தப்பட்டது. அதேபோல் இரண்டாம்மூன்றாம்இடங்களுக்கும்அந்தவாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கிறோம்.

அதனூடாக புதிய பொருளாதார பாதைக்குள் பிரவேசிக்க முடியும். அதேபோல் 2048 இல் அபிவிருத்தி அடைந்த நாட்டை உருவாக்கும்வேலைத்திட்டத்தின்ஒரு பகுதியாகவே இந்த பொறுப்புக்களை உங்களிடத்தில் கையளிக்கிறேன். இதற்கு பங்களிப்பு வழங்கி ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றி.

நுகவெல கல்லூரிக்குள் நுழைந்த போது எனக்கு மற்றுமொரு விடயம் நினைவில் வந்தது. முன்னாள் கல்வி அமைச்சர் சீ.டபிள்யூ.டபிள்யூ. கண்ணங்கர அவர்களே மத்திய கல்லூரிகள் தொடர்பிலான யோசனையை அரச மந்திரிகள் சபையில் சமர்பித்து நிறைவேற்றினார். அதன் பலனாக நாடாளுமன்ற தேர்தலில்ஹொரனைமக்கள் அவருக்கு தோல்வியைப் பரிசளித்தனர்.

அதுவே கல்வி அமைச்சர்கள் முகம்கொடுக்க வேண்டிய நிலைமையாகும். அதற்காக அடுத்த ஆட்சியில் டீ.எஸ் சேனநாயக்க தெரிவு செய்யப்பட்டார். ஏ.டிநுகவெல கல்வி அமைச்சராக தெரிவு செய்யப்பட்டார். அவர் 50 மத்திய கல்லூரிகளை நிறுவ உதவினார்.

நுகவெல மத்திய கல்லூரிக்கு மேலதிகமாக மேலும் 49 மத்திய கல்லூரிகளை உருவாக்கியமைக்காக அவருக்கு நன்றி தெரிவிக்கிறேன். அவர் உருவாக்கிய பாடசாலையொன்றில் புதிய வேலைத் திட்டம் ஒன்றை தொடங்குவதும் மகிழ்ச்சிகுரியதாகும் - என்றார்.

# பால்நிலை சமத்துவத்தை கட்டியெழுப்ப பயிற்சிநெறி





'இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் பால்நிலை சமத்துவத்தை கட்டி எழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக கல்முனை பிராந்திய உளநலப்பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே. நௌபலால் ஏற்பாடு செய்யப்பட்ட தாதிய உத்தியோகத்தர்களுக்கான பால்நிலை சமத்துவம் தொடர்பான விசேட பயிற்சி நெறி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் விரிவுரை மண்டபத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பிரபல வளவாளரும் பிராந்திய உளநலப்பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரியுமான டாக்டர் எம்.ஜே.நௌபல், உளமருத்துவ சமூக உத்தியோகத்தர் எம்.ஆர்.எம். ஹமீம் ஆகியோர் கலந்து கொண்டு குறித்த நிகழ்வில் விரிவுரைகளை நடத்தியதுடன் பங்குபற்றுனர்களுடன் கலந்தாலோசனைகளிலும் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வின் ஆரம்பத்தில் பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம்.பீ. அப்துல் வாஜித் கலந்து கொண்டிருந்ததுடன் விசேட கலந்தாலோசனையிலும் ஈடுபட்டிருந்தார்.

இந்நிகழ்வில் விசேடமாக வேலைத் தளங்களில் பால்நிலை சமத்துவங்களை எதிர்கொள்ளுதல் ஓர் உளவியல் கண்ணோட்டம் என்ற தலைப்பிலும் பெண்களுக்கான சட்ட ரீதியான பாதுகாப்பு பால் ரீதியாக பாரபட்சம் காட்டப்படுதலில் இருந்து விடுகை பெறுதல் போன்ற பல்வேறு விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)



# மாணவர்களுக்கு போசாக்கான உணவு வழங்கல் குறித்த விழிப்புணர்வு கூட்டம்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ. எல். எம் றிபாஸின் வழிகாட்டலில், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.எல்.எம்;. ரயீஸின் தலைமையில் ஆரம்ப பிரிவு மற்றும் இரண்டாம் நிலைபிரிவுபாடசாலை மாணவர்களுக்கு போக்கான காலை உணவுவழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை முறைமைப்படுத்தும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பாடசாலையில் உணவு வழங்கும் நிகழ்ச்சி திட்டத்திற்கு பொறுப்பான ஆசிரியர்கள், சுகாதார கழக மாணவர்கள் மற்றும் பாடசாலைகளுக்கு உணவு விநியோகிப்பவர்கள் போன்ற பலர் கலந்து கொண்டனர். (05)




# வீட்டுத்தோட்ட உபகரணங்களும் உலர் உணவு பொதியும் வழங்கல்







சமூக அபிவிருத்தி நிறுவனம் காரைதீவு ஸ்பீட் நிறுவனத்துடன் இணைந்து அம்பாறை மாவட்டத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம்மக்கள்வாழும் 10 கிராமங்களை உள்ளடக்கியதாக சகவாழ்வு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்தச் செயற்பாடுகள் ஊடாக 10 கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள கிராம ஒத்துழைப்பு மன்ற அங்கத்தவர்களின் இயலுமையை வலுப்படுத்தி அவர்கள் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றன.

இன்றைய பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக பல்வேறு சமூக முரண்பாடுகளையும் ஏற்படுத்துகின்றது. இதனை குறைக்கும் நோக்குடன். குறிப்பிட்ட கிராம ஒத்துழைப்பு மன்றத்தின் அங்கத்தவர்களுக்குவீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையை ஊக்கப்படுத்தும் நோக்குடன் பயிர் செய்கையை மேற்கொள்வதற்கான உபகரணங்களும், உலர் உணவு பொதியும் வழங்கும் நிகழ்வு காரைதீவு லேடி லங்கா மண்டபத்தில் சமூக அபிவிருத்தி நிறுவன பிராந்திய இணைப்பாளர் எம்.எஸ்.ஜலீல் தலைமையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வுக்குபிரதமஅதிதியாக அம்பாறைமாவட்டசெயலாளர்சிந்தக்க அபேவிக்கிரமவும், கௌரவ அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் மற்றும் சிறப்பதிதியாக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ஐ.எல்.எம்.இர்பான், பங்காளர்நிறுவனமானஸ்பீட்நிறுவன செயலாளர் வீ ஜனார்த்தனன், உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான வலையமைப்பு மற்றும் இத் திட்டத்துக்கான ஸ்பீட் நிறுவன இணைப்பாளர் எம்.ஐ.றியால், அதன் அங்கத்தவர்களும்கிராமஒத்துழைப்பு மன்ற அங்கத்தவர்களும் கலந்து கொண்டார்கள். இந்த நிகழ்வில் காரைதீவு, கல்முனை வடக்கு மற்றும் சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள 75 கிராம ஒத்துழைப்பு மன்ற அங்கத்தவர்களுக்கு இந்த உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.09.2023இல் வெளியிடப்பெற்றது.